தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU



மங்கையர் மனம் கவரும் தங்க நகைகளுக்கு
விஷானி நகை மாளிகை

இல. 187, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
0212219510



முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2043 | ஐப்பசி 20 திங்கட்கிழமை (05.11.2012) | பக்கங்கள் 20 | ஓசை – 036















# 13 ஆவது திருத்த அமுல் இந்தியா மீள வலியுறுத்து

(ஜெனிவா)

13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உரையாற்றிய இந்தியாவின் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள இதனைத் தெரிவித்துள்ளனர்.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அகில கால மீளாய்வு அமர்வுகளில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாக இலங்கை வாக்குறுதி அளித்திருந்ததாக இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

2008 ஆம் ஆண்டு அகில கால மீளாய்வு அமர்வுகளில் வாக்குறுதி அளித்ததனைப் போன்று இலங்கை 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்தியுள்ளது.

கூடிய விரைவில் காத்திரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டுமென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வடக்கின்

19 ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் தவறிவீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் 3 வயதுச் சிறுவன் தோட்டக் கிணற்றில் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தான்

2 ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சிவராசா அபிலாஷ் (வயது-3) என்ற சிறுவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவான்.

சம்பவம் பற்றி மேலும்

19 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு வருகிறார் இந்திய இராணுவத் தளபதி



(கொழும்பு)

இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் பிக்ரம்சிங் அடுத்த மாதம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இருதரப்பு இராணுவ ஒத்துழைப்புகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாக பேச்சுக்களை நடத்தவே ஜெனரல் பிக்ரம்சிங் கொழும்பு செல்லவுள்ளதாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

டிசம்பர் மூன்றாவது வாரத்தில் வருகை தரும் அவர் தனது பயணத்தின் போது, பயிற்சி, போர்த்தளபாடங்கள், கூட்டுப் பயிற்சிகள் தொடர்பான ஒத்துழைப்புகளை வலுப்படுத்திக் கொள்வது தொடர்பாக கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் கட்டுப்படுத்திய அனுபவங்கள் குறித்தும் அவர்

19 ஆம் பக்கம் பார்க்க

## கேப்பாபிலவு மீள்குடியமர்வு கூட்டமைப்பு வழக்குத் தாக்கல்

கேப்பாபிலவு மக்களை தமது சொந்த இருப்பிடங்களில் குடியமர்த்தக் கோரி வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

மீள்குடியேற்றப் போவதாக அழைத்துச் சென்று, முல்லைத்தீவு மாவட்டம் சீனியாமோட்டையில் குடியேற்றப்பட்டுள்ள கேப்பாபிலவு பகுதி மக்களுக்கு நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன் நேற்று முன்தினம் 5 வீடுகளுக்கு அடையாளமாக, வைபவ ரீதியாக அடிக்கல் நாட்டியுள்ளார்.


இது பற்றி கருத்து வெளியிட்ட முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், மீள்குடியேற்ற அமைச்சின் நிதியொதுக்கீட்டில் தலா மூன்றரை இலட்சம் ரூபா செலவில் இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அவற்றில், முதற் கட்டமாக 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. மொத்தமாக 165 வீடுகள் இந்தப் பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளன என்றும் அரச அதிபர் வேதநாயகன் கூறினார்.

இந்த வீடுகள் கட்டப்படவுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

## புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நிதியுதவி



(யாழ்ப்பாணம்)


தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் வட மாகாணத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த ஆயிரத்து 647 மாணவர்களுக்கே இந்த நிதியுதவி வழங்கப்பட்டது.

வடமாகாணக் கல்வியமைச்சின் ஏற்பாட்டில் கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் ஆளுநரின் செயலாளர் இளங்

19 ஆம் பக்கம் பார்க்க

## விஷமிகளால் உடைக்கப்பட்ட நன்னீர் தேக்க மதவுப்பாலம்



(நெடுந்தீவு)

நெடுந்தீவில் நன்னீர் வளத்தைப் பெருக்கும் வகையில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட நெடுந்தீவு மேற்கு முதலாம் வட்டாரத்திலுள்ள ஆற்றங்கரை ஓடை வான் கதவுகள் இன்ந்தெரியாத விஷமிகளால் உடைக்கப்பட்டு முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளது.

வான் கதவுகள் உடைக்கப்பட்டதனால் தேங்கியிருந்த மழை நீர் முழுவதும் கடலுக்குள் சென்றுள்ளது. இதனால் இவ்வருடம் நெடுந்தீவில் நிலத்தடி நீர் வற்றக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

விஷமிகளின் இந்தச் செயற்பாடு தொடர்பாக மக்கள் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தவிசாளரிடம் தெரிவித்துள்ளதுடன் சம்பந்தப்பட்டவர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தினர்.

இதனையடுத்து உடனடியாகவே செயற்பட்ட பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சியன் மற்றும் பிரதேச

19 ஆம் பக்கம் பார்க்க

## காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட இளைஞர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடும் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமானார்.

நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதியைச் சேர்ந்த உதயகுமார் அருள்வின்சன் (வயது-19) என்ற இளைஞரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொ

19 ஆம் பக்கம் பார்க்க

### நாளைய தினமுரசில்...

வே. அர்ச்சுணன் எழுதும் “விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்” கட்டுரைத் தொடரின் 3 ஆம் பகுதி.





# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர்

## பரம்சோதி தேவகுஞ்சரி

(இடைப்பிட்டி, காரைநகர்)

திதி 05.11.2012

**மண் மலர் 03.09.1961**

**விண் மலர் 16.11.2011**

குஞ்சரித்தாய் குவலயத்தில்
குன்றனைய விளக்காகி
எம் குலத்தை வாழவைத்து
எல்லோர்க்கும் வழிகாட்டி
இவ்வுலகு இறையுலகு
இரண்டிலுமே பரம்சோதி
இணையடிகள நீழலிலே
இன்புற்றாள் தவப்பேறே!
திருவடியில் சிவனருளால்
பெருமுக்தி அடைந்தாலும்
இருவிழிகள் நீர் சொரிய
இதயத்துள் நினைவேற்றி
திருத்தாயின் அடி தொழுவோம்

மன மலரால் அர்ச்சிப்போம்...
அருள் சொரியும் அன்னைமுகம்
அன்றாடம் பூஜிப்போம்.
ஒன்றென்ன ஒருகோடி-
ஆண்டோடிப் போனாலும்
என்றென்றும் எமதுள்ளம்
நீயுறையும் கோயிலம்மா
நன்றெமக்கு நல்கிடுவாய்
நாளும் ஒளி யூட்டிடுவாய்...
நின்னடியை சரணடைந்தோம்.
நின்னருளால் அமைதி கொள்வோம்.

354/7 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(C/2090)

(வெங்கடேஸ்வரா யாழ்ப்பாணம்)

# தனியார் கல்வி நிலையங்களும் மாணவரின் ஆற்றலை வளர்க்க வேண்டும்

— பேராசிரியர் வேல்நம்பி —

(யாழ்.நிருபர்)

பணத்தை வசூல் பண்ணும் நிறுவனங்களாக மட்டும் தனியார் கல்வி நிறுவனங்கள் செயற்படக்கூடாது. மாணவர்களின் மனப்பாங்கினையும் அவர்களது குடும்பச் சுழலையும் உணர்ந்து பல்வேறு திறன்கள் கொண்டவர்களாக வளர்த்தெடுப்பதற்கு தனியார் கல்வி நிலையங்கள் அர்பணிப்புடன் செயற்பட வேண்டும். என யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ஸ்ரீ.வேல்நம்பி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் றோயல் அக்கடமியின் பரிசளிப்புவிழா மற்றும் சிரேஷ்ட ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வுகளின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பணத்தை வசூல் பண்ணும் நோக்கத்தைக் கொண்டு பல கல்வி நிலையங்கள் இயங்கும்போது இரண்டு வருட காலத்தில் மாணவர்களின் தேவையை அறிந்து நன்கு திட்டமிட்டு செயற்படுவதால் இந்நிறுவனம் நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது.

எமது பிரதேசத்தில் 30-35 வருடங்களுக்கும் மேலாக பல்வேறு நிறுவனங்களிலும் கல்வி போதித்துவந்த அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட ஆசிரியர்கள் இங்கு ஒன்றிணைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கான சிரேஷ்ட ஆசிரியர் கௌரவிப்பினை யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக இக்கல்வி நிறுவனம் நடத்துவது பாராட்டுக்குரிய நிகழ்வாகும்.

தனியார் சுல்வி நிலைய ஆசிரியர்களில் பலர் கஷ்டத்தின் மத்தியிலே இத்தொழிலுககு வந்தவர்கள் எனவே மாணவர்களின் கஷ்டநிலையை உணர்ந்து அர்ப்பணிப்புடன் கற்பிக்கவேண்டும். எங்களுடைய பிரதேசம், எங்களுடைய பிள்ளைகள் என்ற உணர்வு எல்லா ஆசிரியர்களிடத்திலும் இருக்க வேண்டும்.

அன்று ஆசிரியரிடத்தில் மாணவருக்கு விசுவாசம் அதிகமாக இருந்தது. இன்று இந்த நெருக்கம் அருகிவருகிறது. மாணவர்கள் ஆசிரியரைப் போற்றி மதிக்க வேண்டும். எந்த ஒரு ஆசிரியரினதும் வசவை எந்த ஒரு மாணவன பெறுகிறானோ அது அவனது வாழ்க்கையைப் பாதிக்கச் செய்யும். எனவே மாணவர்கள் ஆசிரியரை மதித்து நடக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

பிரதம விருந்தினரால் சிரேஷ்ட ஆசிரியர்களான பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை, இரா.செல்வவடிவேல், கே.வேலாயுதம், ஏ.குணசிங்கம், வி.தவகுலசிங்கம், எஸ்.சந்திரமௌலி ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (10)



முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் வேண்டுகோளிற்கிணங்க முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப்பொருட்கள், நுளம்பு வலைகள், கூரை விரிப்புக்கள் மற்றும் நிலவிரிப்புக்கள் என்பன முதற்கட்ட உதவியாக யூ.ஆர்.பிறண்ட் பௌவுண்டேசன் நிறுவனத்தால் வழங்கப்படுவதைக் காணலாம்.

## மண்டைதீவிலுள்ள ஆலயத்தில் மூலவிக்கிரகம் திருட்டு

மண்டைதீவு கிராமத்தின் நுழைவாயில் கடல் நீர்த் தடுப்பணையின் அருகாமையில் இருக்கும் பிள்ளையார் ஆலய மூலவிக்கிரகம் கடந்த செவ்வாய்க்கிழமை காணமால் போயுள்ளது.

ஆலயத்திற்கு மதியநேர பூசைக்காக பத்துமணிக்கு வந்த பூசகர் இதை முதலில் கண்டுள்ளார். மூன்று சிறு மண்டபங்களைக் கொண்ட கோவிலின் கருவறையில் உள்ள கணேசர் விக்கிரகமே காணாமல் போயுள்ளது. விலை மதிப்பான வெள்ளித்திருவுருவச் சிலையை விட்டுவிட்டு மூலவரை மட்டும் திருடர்கள் திருட வேண்டிய அவசியம் என்ன என மக்கள் கேட்கின்றனர். அத்துடன் கருவறையின் கதவும் உடைத்தோ அல்லது கழட்டியோ எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (23)

## ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்

(அச்சுவேலி)

எதிர்வரும் டிசம்பர் மாதம் இடம்பெறவுள்ள கல்விப் பொதுத் தரா தர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்தும் வகையில் யாழ் வலய பாடசாலைகளில் தரம் 11 இல் கற்று வரும் மாணவர்களுக்காக யாழ் வலய விஞ்ஞானப் பிரிவினரால் நடாத்தப்பட்ட மதிப்பீடு 3, பௌதீகவியல் பயிற்சிப்பரீட்சையின் பகுப்பாய்வுப் புள்ளிகளை தாமதமின்றி அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு யாழ் வலய விஞ்ஞானப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடு 1 உயிரியல், மதிப்பீடு 2 இரசாயனவியல் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய பயிற்சிப் பரீட்சைகள் கடந்த இரண்டாம் தவணைக் காலப்பகுதியில் நடாத்தப்பட்டிருந்த நிலையில் மேற்படி பயிற்சிப் பரீட்சைகளின் தொடர்ச்சியாக கடந்த மாதம் 27 ஆம் திகதி பௌதிகவியல் பயிற்சிப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (03)

## தேங்கி நிற்கும் வெள்ளத்தால் மரக்கறிப்பயிர்கள் அழிவு

(அச்சுவேலி)

கடந்த வாரம் குடாநாடெங்கும் கொட்டித் தீர்த்த கடும் மழையினைத் தொடர்ந்து வலிகாம் கிழக்கு பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்னர். தொடர்ச்சியாகப் பெய்து வந்த கடும் மழை காரணமாக விவசாய நிலங்களில் மழை நீர் வழிந்தோட முடியாது தேங்கி நிற்பதால் தாழ்நிலப் பகுதிகளில் பயிரிடப்பட்ட மரக்கறிப் பயிர்கள் அழிந்து போகும் நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால் கிழக்கு, புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி ஆகிய பிரதேசங்களின் தாழ்நிலப் பகுதிகளில் மரக்கறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்த விவசாயிகளே வெள்ளம் காரணமாக இத்தகைய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். மேற்படி பகுதிகள் தாழ்நிலப் பகுதி ஆகையால் இங்கு நீர் மட்டம் மேலிருப்பதால் வெள்ள நீர் வழிந்தோட முடியாத நிலை காணப்படுகின்றது.

இதேவேளை மழை வெள்ளம் காரணமாக மரவள்ளிக் கிழங்கின் விலை பதினைந்து ரூபாவாகக் காணப்படுகின்ற அதேவேளை ஏனைய மரக்கறிகளின் விலை இப்பிரதேசங்களில் வழமையை விட அதிகரித்துக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (03)

## சிறுவர்தினப் போட்டி முடிவுகள்

நேற்றைய தொடர்ச்சி...

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகத்தினால் யாழில் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப் பட்டுள்ளது.

விபரம் வருமாறு,

'ஓவியம்'

ஆரம்பபிரிவு

கி.பிறோயன் (பருத்தித்துறை), ச.நிவாசிகா (கரவெட்டி), மு.நிதுஷன் (கோப்பாய்).

கீழ்ப்பிரிவு

க.வினோஜன் (உடுவில்), செ.நிவிர்த்திகன் (கோப்பாய்), கிறிஸ்ரி ராஜ்கிரன் (நெடுந்தீவு).

மத்தியபிரிவு

தி.தஜிதரன் (கோப்பாய்), ஜெ.கிருசாந்தன் (உடுவில்), பொ.சிவதரன் (கரவெட்டி).

மேற்பிரிவு

உ.ராம்கி (கோப்பாய்), ஆனந்த காங்கேயன் (காரைநகர்), த.கிஷாந்த் (தெல்லிப்பளை).

'கவிதை'

ஆரம்பபிரிவு

யோ. .அனுசியா (மருதங்கேணி), த.கவிதரன் (கோப்பாய்), ர.சங்கவி (கரவெட்டி),

கீழ்ப்பிரிவு

தமிழினி மதுராஞ்சலி (யாழ்ப்பாணம்), பி.நிருசிகா (சண்டிலிப்பாய்), சி.வினித் (மருதங்கேணி).

மத்தியபிரிவு

ரி.சயந்தினி (சாவகச்சேரி), றா.றாம்ஜி (மருதங்கேணி), ம.ஜெபான்சினி (நெடுந்தீவு).

மேற்பிரிவு

செ.கீர்த்திகா (சங்கானை), யோ.நிசாந்தினி (சண்டிலிப்பாய்), அ.பிருந்தா (காரைநகர்).

## கற்றல் செயற்பாடுகள் இல்லை பெற்றோர்கள் போராட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை செம்பியன் பற்று அ.த.க.பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் ஒருவார காலமாக நடைபெறாததைக் கண்டித்து பாடசாலை மாணவர்களும், பெற்றோர்களும் நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து வடமராட்சி கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி ஆகியோர் உடனடியாக பாடசாலைக்கு விஜயம் செய்து பெற்றோர்களுடன் கலந்துரையாடினர். இதன் போது பெற்றோர்கள் அதிபருக்கு நடந்ததைப் போல் பிள்ளைகளும் தாக்கப்படலாம் என தாம் அச்சம் அடைவதாகவும் மாணவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து அதிகாரிகள் குறித்த பாடசாலை அதிபர் வேறொரு பாடசாலையில் கடமையாற்ற முடியும் அவ்வாறு அவர் சென்றால் இப்பாடசாலைக்கு பிறிதொரு அதிபரை இருவாரங்களுக்குள் நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர். (109, 116)





சாவகச்சேரி மட்டுவில் பன்றித்தலைச்சி ஸ்ரீ கண்ணகாம்பிகா தேவஸ்தான திருதியதள நூதன இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது. ஆலயத்தின் முன்புறத் தோற்றத்தையும், இராஜகோபுரம் கும்பாபிஷேகம் செய்யப் படுவதையும் காணலாம்.

(படம்:ஆர்.ராஜகுமார்)

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## ஆதிமனித அழிவுநிலை வேண்டாம்!

பகை கொண்ட உள்ளம் துயரத்தின் இல்லம்; தீராத கோபம் யாருக்கு லாபம் என்ற சினிமாப் பாடல் வரிகள் நமக்குத் தெரியும். கோபத்தையும் பகையையும் மறக்க முடியாமலிருப்பதும் நம் துன்பங்களுக்குக் காரணம் என்பது இன்று பலருக்கும் புரியாமலிருக்க முடியாது.

இந்த நாட்டில் ஏனைய சமூக மக்களுடன் சேர்ந்துதான் நமது வாழ்வு என்ற உண்மையை நேர்நோக்குவதற்கு நாம் மறுக்கிறோம். இதற்கெதிரான பகை வளர்க்கும் கோபமூட்டல்களைச் செய்வோருக்கு நாம் எளிதில் இரையாகிவிடுகிறோம். அதுதான் நம்மை மீளவிடாமல் துன்பச் சகதிக்குள் தள்ளிக்கொண்டிருக்கிறது என்ற யதார்த்தத்தை யோசிப்பதேயில்லை. ஏனைய சமூகங்களுடன் பேசி இணங்கவைத்துத்தான் நமக்கான தீர்வைப் பெறமுடியும் என்ற உண்மைக்கு ஒளித்து ஒளித்து எவ்வளவு காலம் வெற்று வீரவசனங்களின் பின்னால் போய்க்கொண்டிருக்கப் போகிறோம்?

யார் வேண்டுமானாலும் கோபம் கொள்ளலாம். அது மிக எளிதானது. ஆனால், சரியான நபரிடம், சரியான நேரத்தில், சரியான காரணங்களுக்காக, சரியான விதத்தில் கோபம் கொள்வது என்பது எளிதானது அல்ல; அது எல்லோராலும் முடியக் கூடியதும் அல்ல. நமது வாழ்க்கையை நிர்மாணித்துக் கொள்வதற்காக கோபத்தை விடத் தெரியவில்லை என்பதுதானே நம் பிரச்சினை.

இன்னல்களை ஏற்படுத்திவிடும் கோபத்தின் கெடுதி அறிந்தே பெரியோர் பலரும் 'கோபம் தவிர்! கோபம் தவிர்!' என்று சொல்கிறார்கள். பாரதியும் அதைப் 'பழகு' என்றுதான் சொல்கிறான். பழக்கமில்லாவிட்டால் ஏடாகூடமாய்ப் பாய்ந்துவிடும்; நம்மையும் சேர்த்தே குதறிவிடும் என்பதுதான். அதனால்தான் 'சீறுவதல்ல, ஆறுவதே சினம்' என்றிருக்கிறாள் ஔவையும்.

மனிதத்துக்கே விரோதியான இந்தக் கோபம் பற்றி மேலை நாடுகளிலும் ஆய்வு செய்து கவலைப்படுகிறார்கள். வரவர கோபப்படுவது அதிகரித்து வருவதிலுள்ள தீமைகளையும் காரணங்களையும் காண்கிறார்கள். இங்கிலாந்தில் செய்யப்பட்ட ஆய்வில், இன்றைய மனிதர்களுக்கு சராசரியாக தினம் ஒரு தடவையாவது பயங்கர கோபம் வருகிறது. 60 சதவீதம் பேர் அற்ப விஷயத்துக்காக கொந்தளிக்கிறார்கள் என்று தெரிய வந்திருக்கிறது.

பணத் தட்டுப்பாடு, தூக்கம் குறைவு, பசி, செல்போனில் தொந்தரவு, அடுத்தவரின் முரட்டுத்தனம் ஆகியவற்றை அந்நாட்டு மக்களின் கோபத்துக்கு காரணங்களாகச் சொல்கிறார்கள். கோபம் தலைக்கேறி தன்னிலை மறப்பது, கொட்டும் வார்த்தைகளால் அடுத்தவர் கண்ணீர் விடவைப்பது, உறவை நட்பை இழப்பது போன்ற சம்பவங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கிறதாம். இது மொத்த சமூகத்தையும் பாதிக்கும் ஆபத்து என்பதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

ஏனைய நாடுகளிலும் இன்றைய மக்களின் கோபத்துக்குக் குறைவில்லை. கோபம் முற்றிய நிலையில் கொலைகளும் நடக்கின்றன. அன்றாட வாழ்க்கை அந்த அளவுக்கு கடினமானதாக, தொல்லைகள் நிறைந்ததாக, ஒழுங்குபடுத்த முடியாததாக மாறிவிட்டது. யோசித்துப் பார்த்தால் எல்லா வகையான கோபத்துக்கும் காரணம் எதிர்பார்த்தது நடக்காமல் போவதுதான் என்பது புரியும். எதிர்பார்ப்பை குறைத்துக் கொண்டால் ஏமாற்றம் ஏற்படாது. அதுவே மகிழ்ச்சியான வாழ்வுக்கு அழைத்துச் செல்லும்.

மக்களைக் காக்கின்ற வகையில் கோபத்தை ஆற்றுவதும், பிரச்சினை தீர புத்திசாலித்தனத்தைப் பிரயோகிப்பதும்தான் சமூக அக்கறை உள்ளவர்களின் எண்ணமாக இருக்கும். இத்தனை ஆண்டுகால மனித அறிவு வளர்ச்சியில், இந்த நிலையை வந்தடைய முடியாதவர்கள் வெறும் ஆதிமனித அழிவுகளை நிகழ்த்திக் கொண்டிருப்பவர்களாகவே ரோசத்தில் தீய்ந்தழிவதைத் தடுக்க முடியாமற் போகும்.

- ஆசிரியர்

# இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம்

# இதுவே அமெரிக்காவின் இலக்கு

## புதிய தூதுவர் மனம் திறக்கிறார்

இலங்கை அரசாங்கம், சட்டம் ஒழுங்கு மற்றும் இனங்களுக்கு இடையிலான இணக்கப்பாடு என்பவை தொடர்பில் உரிய கவனம் செலுத்தவேண்டும். இதனையே அமெரிக்காவும் சர்வதேசமும் வலியுறுத்தி வருவதாக அமெரிக்காவின் இலங்கைக்கான தூதர் மிச்செய்ல் சிஸன் தெரிவித்துள்ளார். இலங்கையில் பதவிப்பொறுப் பேற்றலின் பின்னர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள முதல் செவ்வியிலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் இலங்கையில் இனப்பிரச்சினை இதுவரை தீர்க்கப்படவில்லை.போர் இடம்பெற்ற இடங்களில் இன்னும் இராணுவமயம் தொடர்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் தயாராகவே உள்ளன.

அத்துடன் பிரச்சினை தீர்க்கப்பட்ட பின்னர் வடக்குகிழக்கு பிரதேசங்களில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும் இந்த நாடுகள் தயாராக உள்ளன. இந்தநிலையில் இலங்கை தமது இணக்கப்பாடு தொடர்பிலான தமது சொந்த நல்லிணக்க அறிக்கையின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும்.

அத்துடன் வடக்கு, கிழக்கில் பொதுமக்களின் நடவடிக்கைகளில் இருந்து இராணுவத்தை விலக்கிக்கொள்ள வேண்டும். காணாமல் போனோர் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு அவர்கள் மரணமாகியிருந்தால் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் மிச்செய்ல் சிஸன் வலியுறுத்தியுள்ளார்.

# மக்கள் நலனுக்கு ஆப்புவைக்கும் அமைச்சர்கள்;

# கடும் தொனியில் சாடுகிறார் சஜித்

(கொழும்பு)

மக்களின் அபிலாஷைகளை உதாசீனம் செய்யும் அமைச்சர்களுக்கு எதிராக குற்றப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடி செய்யப்பட்ட ஹெய்ஜின் கொடுக்கல் வாங்கல்களுக்கு பணம் செலுத்த வேண்டாம் என உச்ச நீதிமன்றமே உத்தரவிட்டது. அதுமட்டுமல்ல ஒரு லீற்றர் பெற்றோலை 100 ரூபாவிற்கு விற்பனை செய்யுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

ஹெய்ஜின் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களை பணி நீக்குமாறு உத்தரவிட்டிருந்தது. மக்களின் உரிமைகளையும் அபிலாஷைகளையும் பாதுகாக்கும் வகையில் உச்ச நீதிமன்றம் செயற்பட்டு வருகின்றது.

எனினும், மக்களின் அபிலாஷைகளை ஆளும் கட்சி அமைச்சர்கள் உதாசீனம் செய்கின்றனர். இவ்வாறான நபர்களுக்கு எதிராக எந்தவிதமான குற்றப் பிரேரணைகளும் சமர்ப்பிக்கப்படுவதில்லை, இதுவே நகைச்சுவையாகும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வீரவில பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது சஜித் பிரேமதாஸ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# சத்திர சிகிச்சையில் குளறுபடி;

# குடும்பப் பெண்ணின் உயிர் பிரிந்தது

## மட்டக்களப்பில் சோகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பழுகாமத்தில் இருந்து கையுடைவு காரணமாக மட்டு. போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சை பெறவந்த குடும்பப் பெண்ணொருவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சையில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக உயிரிழந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பழுகாமத்தை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான 30 வயதுடைய சிவனேசன் சிவகலா மிகவும் வறுமை நிலையில் உள்ளவர்.

குறித்த பெண் கடந்த புதன் கிழமை வீட்டில் வழுக்கி விழுந்ததால் அவரது கை மணிக்கட்டுப் பகுதியில் பாரிய அடி ஏற்பட்டது. இதனையடுத்து சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மறுநாள் வியாழக்கிழமை அவருக்கு கை மணிக்கட்டுப் பகுதியில் சத்திர சிகிச்சை செய்யவென அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சத்திரசிகிச்சையின்போது குறித்த பெண் உயிரிழந்துள்ளார். சத்திரசிகிச்சையின்போது இடம்பெற்ற சில பிழையான சிகிச்சை காரணமாகவே குறித்த பெண் உயிரிழந்திருக்கலாம் என குடும்பத்தினரால் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உள்ள பொலிஸ் காவலரணில் தெரிவிக்கப்பட்டதையடுத்து இது தொடர்பில் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, ஸ்தலத்துக்கு விரைந்த நீதிபதி மரண விசாரணையை மேற்கொண்டதுடன் உயிரிழப்பில் சந்தேகம் நிலவுவதால் விசேடமாக கொழும்பில் இருந்து பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியர்களை வரவழைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிறந்த முகாமைத்துவ நடவடிக்கைகள் உள்ள போதும் ஒரு சிலரின் கவலையீனங்களால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மாணவர்களின் இடை விலகல்

# குறைப்பதற்குத் திட்டம்

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலைக் குறைப்பதற்கான விசேட திட்டம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளதாக கல்வியமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளார்.

இலங்கையில் - ஆண்டு தோறும் 200,000 பிள்ளைகள் பாடசாலையிலிருந்து இடைவிலகுவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் திணைக்களம் கூறியுள்ளது.

அறிவு அடிப்படையான பொருளாதாரம் என்ற இலட்சியத்தை அடைவதற்கு பிள்ளைகள் தமது பாடசாலைக் கல்வியை முழுமையாகப் பூர்த்தி செய்வது அவசியமான நிபந்தனையாகும் என அமைச்சர் கூறினார்.


உலக வங்கி நிதி வழங்கும் கல்வியின் பண்பு தரத்தை முன்னேற்றும் திட்டத்தினூடாக தரம் - 11 வரையான பாடசாலை கல்வியிலிருந்து இடைவிலகுவது குறைக்கப்படும் என அமைச்சர் கூறினார். பாடசாலையை விட்டு விலகியுள்ளவர்களுக்காக 3000 குறுங்கால தொழில் பயிற்சி பாடநெறிகளும், சுற்றுலாத்துறை வேலை வாய்ப்பை வழங்கக் கூடிய 1800 பயிற்சி திட்டங்களும் நடத்தப்படவுள்ளன என அமைச்சர் கூறினார்.

# விசேட விபத்து சேவைப் பிரிவுகள்


# நாடு முழுவதும் அமைக்க முடிவு

கொழும்பு தேசிய மருத்துவமனையைச் சேர்ந்த விபத்து சேவைக்கு மேலதிகமாக நாடளாவிய ரீதியில் முக்கிய நகரங்களில், விபத்து சிகிச்சை பிரிவுகளை ஸ்தாபிக்க சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. நாடளாவிய ரீதியாக 80 ஆயிரத்திற்கும் அதிகமான வீதி விபத்துக்கள் ஏற்படும் நிலையிலேயே இந்தத் திட்டத்தை அமைச்சு அமுல்படுத்த தீர்மானித்துள்ளது.

ஸ்தாபிக்கப்படவுள்ள விபத்து சேவைகளில், நவீன வசதியுடனான உபகரணங்கள் பொருத்தப்படுவதுடன், விசேட மருத்துவ நிபுணர்களின் சேவையும் பெறப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விபத்து மருத்துவ சேவைகள் கண்டி, காலி, மாத்தறை, கேகாலை, இரத்தினபுரி, பதுளை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.




# பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் எழுதியிருக்கமாட்டேன்!



**- கே. ரகோத்தமன்**

**பதினெட்டு** ஆண்டுகளுக்கு முன்னர் ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுப் பிரிவின் தலைமைப் புலனாய்வு அதிகாரியாகப் பணி யாற்றியவர் கே. ரகோத்தமன். 'ராஜீவ் படுகொலை வழக்கு: மர்மம் விலகும் நேரம்' (வெளியீடு: கிழக்கு பதிப்பகம்) என்ற புத்தகத்தின்மூலம் பல அதிர்ச்சிகரமான செய்திகளை முதல் முறையாக வெளியிட்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகள். தங்களுக்குள் எழுதிக்கொண்ட பல கடிதங்களை ஆதாரங்களாக முன்வைக்கும் இந்நூல், பல தமிழக அரசியல்வாதிகள், இந்திய உளவுத்துறை அதிகாரிகள், சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் என்று பலர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறது. இது குறித்து குமுதம் ரிப்போர்ட்டர் நிருபர் ரகோத்தமனிடம் மேற்கொண்ட உரையாடலின் ஒரு பகுதி:

**கேள்வி: பதினெட்டு வருடங்கள் அமைதியாக இருந்துவிட்டு இப்போது ராஜீவ் கொலை வழக்கு பற்றி எழுதவேண்டிய அவசியம் என்ன?**

மொத்தம் மூன்று காரணங்களைச் சொல்லவேண்டும். நம்முடைய நாட்டில் நடந்த முக்கிய படுகொலை இது. அதைப் பற்றிய புலன் விசாரணையைத் தொடங்கி, மூளை உழைப்பு, மனித உழைப்பு எல்லாவற்றையும் கொட்டி, A to Z எல்லா விவரங்களையும் சேகரித்தோம்.குற்றப்பத்திரிகை தாக்கல்செய்தோம். விடுதலைப் புலிகள்தான்செய்தார்கள் என்று திட்டவட்டமாகக் கூறியிருந்தோம். இத்தனைக்குப் பிறகும் ராஜீவ் கொலையை விடுதலைப் புலிகள் செய்யவில்லை என்ற ஒரு கருத்து தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. சந்திராசாமி செய்யச் சொன்னார் என்கிறார்கள். சி.ஐ.ஏ. உளவு அமைப்பின் கைங்கர்யம் என்கிறார்கள். இந்தத் திசை திருப்பல் எனக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, இதற்கு ஏதேனும் செய்யவேண்டும் என்று நினைத்தேன்.

அடுத்து, படுகொலை செய்யப்பட்ட ராஜீவின் மனைவி இன்று இந்தியாவின் மிகப்பெரிய கட்சியின் முக்கியப் பொறுப்பில் இருக்கிறார். அவரது கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறது. ராஜீவ் காந்தியைக் கொன்றது யார் என்பதைத் தெரிந்து கொள்வது வெகு சுலபம். அவர்களாக ஏஜென்ஸி வைத்துக்கூட விசாரித்து உண்மையைத் தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் தனது மகள் பிரியங்காவை அனுப்பி குற்றவாளி நளினியிடம், “என் அப்பாவைக் கொலை செய்தது யார்?” என்று கேட்டதாக செய்தி வந்தது. எனில், ராஜீவ் குடும்பத்தினர் சிறப்பு புலனாய்வுக் குழுவையோ, அதன் குற்றப்பத்திரிகையையோ நம்பவில்லை என்றுதானே அர்த்தம். இது எனக்கு மனவருத்தத்தைக்கொடுத்தது. உண்மையில் தடா நீதிமன்றத்தில் நாங்கள் தாக்கல் செய்த பல சாட்சியங்கள், ஆவணங்கள் வெளியே வராமல் போய்விட்டன. அவை முறைப்படி எல்லோருக்கும் தெரியவந்திருந்தால் இந்த சர்ச்சைகளைத் தவிர்த்திருக்கலாம். ஆதாரங்கள் கைவசம் இருந்தும் யாருக்கும் தெரியாமல் இருக்கிறதே என்ற ஆதங்கம் எனக்குள் இருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக, ராஜீவ் கொலை வழக்கைப் பொறுத்தவரை நான் தலைமைப் புலனாய்வு அதிகாரி. வழக்கின் பிரதம குற்றவாளியான பிரபாகரனும், அடுத்த நிலைக் குற்றவாளியான பொட்டு அம்மானும். தேடப்படும் குற்றவாளிகளாக இந்திய அரசால் அறிவிக்கப் பட்டிருந்த நிலையில், புலனாய்வு அதிகாரியான நான் - ஓய்வு பெற்றுவிட்டாலும் - அது குறித்துப் பேசக் கூடாது. அது சட்ட விரோதம். அதனால்தான் ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக நான் அறிந்த உண்மைகளை இதுநாள் வரை வெளியில் பேசாமல் இருந்துவந்தேன்.

ஆனால் சமீபத்தில்இலங்கையின் முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை வழ விசாரணையில், பிரதான குற்றவாளகளாக அறிவிக்கப்பட்டிருந்த பிரபாகரனும் பொட்டு அம்மானும் இறந்துவிட்டதாக இலங்கை அரசேஅறிவித்து, அந்த வழக்கை மூடிவிட்டார்கள். இனி இந்தியாவிலும் ராஜீவ் கொலைவழக்கில் தேடப்படும் குற்றவாளிகளாக நிச்சயம் பிரபாகரனும் பொட்டு அம்மானும் இருக்கப்போவதில்லை. இதுதான் என்னை புத்தகம் எழுதத் தூண்டியது. ஒருவேளை பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் புத்தகமே எழுதியிருக்கமாட்டேன்.

**கேள்வி: பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா?**

பரிபூரணமாக. இலங்கை அரசு நீதிமன்றத்திலே அதைப் பதிவுசெய்த பிறகு ஏன் நம்பாமல் இருக்கவேண்டும். இந்த விஷயத்தில் எந்த நாடும் பொய் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. சொல்லவும் மாட்டார்கள். விடுதலைப் புலிகளை ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இறந்து போனவர் பிரபாகரன் என்று கருணாவே அடையாளம் காட்டியிருக்கிறார். ஆகவே, பிரபாகரன் உயிரோடு இருக்க வாய்ப்பே இல்லை.

**கேள்வி: சிறப்புப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் கார்த்திகேயன் மீது நீங்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை இதற்கு முன்னால் எந்த அதிகாரியும் வைத்ததில்லை. புலனாய்வின்போது நிறைய இடையூறுகள் ஏற்பட்டதாகவும் புத்தகத்தில் சொல்லியிருக்கிறீர்கள். ஓரிரு உதாரணங்களைச் சொல்ல முடியுமா?**

கார்த்திகேயன் மீது குற்றச்சாட்டு எதையும் முன்வைக்கவில்லை. ஆனால் சில குறைபாடுகள் இருந்தன என்பதுதான் என்னுடைய வாதம். புலனாய்வு தொடங்கிய புதிதில் இதில் சம்பந்தப்பட்ட ஒருவரைக்கூட விட்டுவிடக்கூடாது. எல்லோரையும் கண்டுபிடிக்கவேண்டும் என்று எல்லோருமே சொன்னார்கள். அவர் எவ்வளவு பெரிய அரசியல்வாதியாக இருந்தாலும் சரி என்றார்கள். விசாரணை தொடங்கி, அரசியல்வாதி , களின் தலையீடு இருக்கிறது என்று தெரிந்தால் யாராக இருந்தாலும் கொஞ்சம் பின்வாங்குவார்கள். இதுதான் ராஜீவ் கொலை வழக்கு விசாரணையிலும் நடந்தது.

ஒரு புலனாய்வு நடக்கிறது என்றால் அதில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்கு எல்லா கோணங்களிலும் விசாரிக்க சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் இவரைப் போய் விசாரிக்காதே அவரைப் போய் எதுவும் கேட்காதே என்று சொல்வது தவறு.

ராஜீவ் படுகொலைக்கு முன்பு அந்தப் பகுதியில் நடக்க இருந்த கருணாநிதியின் பொதுக்கூட்டம் ஒத்தி வைக்கப் படுகிறது என்றால் அது ஏன் என்பது குறித்து விசாரிக்க வேண்டும். நான் கருணாநிதியை விசாரிக்கவேண்டும் என்று கார்த்திகேயனிடம் கேட்டேன். ஆனால் கார்த்திகேயன் என்ன சொன்னார் தெரியுமா? “இனிமே இந்தமாதிரி வேலையெல்லாம் செய்யாதீங்க” இதற்கு என்ன அர்த்தம்? கருணாநிதியை விசாரிப்பதில் கார்த்திகேயனுக்கு விருப்பமில்லை என்றுதானே!

**படுகொலை செய்யப்பட்ட ராஜீவின் மனைவி தனது மகள் பிரியங்காவை அனுப்பி குற்றவாளி நளினியிடம், ‘என் அப்பாவைக் கொலை செய்தது யார்?’ என்று கேட்டதாக செய்தி வந்தது. எனில், ராஜீவ் குடும்பத்தினர் சிறப்பு புலனாய்வுக் குழுவையோ, அதன் குற்றப்பத்திரிகையையோ நம்பவில்லை என்றுதானே அர்த்தம். இது எனக்கு மனவருத்தத்தைக் கொடுத்தது.**

புலன் விசாரணையின்போது பல வீடியோ கசட்கள் கிடைத்தன. அதில் ஒன்று, புலிகளின் குகையில் என்ற தலைப்பிடப்பட்ட வீடியோ. வைகோ இலங்கைக்கு சென்று பிரபாகரனைச் சந்தித்தது, அவருடன் பேசியது போன்ற காட்சிகள் எல்லாம் அதில் இருக்கும். ஆகவே, புலிகளுடன் நெருக்கமான தொடர்பு கொண்ட அவரிடம் விசாரணை செய்யவேண்டும் என்று நினைத்தேன். பிறகு சின்ன சாந்தனிடம் விசாரணை செய்தோம். அப்போது அவர், “கொடுங்கையூரில் சிவராசனை வெள்ளை உடையில் வந்த ஒருவர் சந்தித்து, “இந்தக் காரியத்தை நல்லபடியாக முடியுங்கள். அடுத்த இலக்கு வைகோவை சி.எம் ஆக்குவதுதான் என்றார்” என்று சின்ன சாந்தன் கூறினார். இது என்னுடைய சந்தேகத்தைக் கிளறியது.

பாளையங்கோட்டையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிய வைகோ, “பிரபாகரனுக்குத் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் உள்ளது” என்று விவரித்துப் பேசினார். அதைப் பற்றி அவரிடம் கேட்டபோது, “அந்த உருவம் என்னுடையது. ஆனால் குரல் என்னுடையது அல்ல” என்று பொய் சொன்னார். அது பத்திரிகையில் வெளியான செய்திதான். ஆனால் அதைச் சொல்வதற்கே தயங்கி, பொய் சொன்னார். இது என்னுடைய சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தியது. அவரை விசாரிக்கவேண்டும் என்று சொன்னேன். அனுமதி கொடுத்தார் கார்த்திகேயன்.ஆனால் சந்தேகத்துக்குரியவராக அல்ல, முக்கியமான சாட்சியமாக மட்டுமே விசாரிக்கவேண்டும் என்று சொன்னார். விசாரணையை சரியான பாதையில் செல்வதற்கு அனுமதி மறுக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். இது எனக்கு மன உளைச்சலைக் கொடுத்தது.

**கேள்வி: ராஜீவ் கொலைச் சம்பவம் அது நடப்பதற்கு முன்பே வைகோவுக்குத் தெரியும் என்று எழுதியுள்ளீர்கள். இந்த முடிவுக்கு நீங்கள் வர எது ஆதாரமாக இருந்தது?**

இரும்பொறை என்பவருக்கு திருச்சி சாந்தன் எழுதிய கடிதம். ராஜிவ் கொலை வழக்கு பற்றி எனக்குத் தெரியும் என்று யாரிடமும்பேசாதே. ரவிச்சந்திரனின் வீட்டில் விடுதலைப் புலிகளை அழைத்துச் சென்று பாதுகாப்பாக வைத்தார்கள். ஆக,என்ன நடக்கப்போகிறது என்பது நிச்சயம் வைகோவுக்குத் தெரிந்திருக்கும். அதேபோல,இந்தமுறை ராஜீவ் வந்தால் உயிருடன் திரும்ப முடியாது என்று பேசியதாக செய்திகள்வெளியாகின. உடனே வைகோ, மண்டல் கமிஷனை எதிர்த்தால் தமிழ் நாட்டில் இருந்து வெளியே போக முடியாது என்றுதான் சொன்னேன் என்று மாற்றி விளக்கம் கொடுத்தார். அவர் என்ன பேசினார், என்ன வார்த்தைகள் பயன்படுத்தினார் என்பதை இன்னும் கொஞ்சம் கூர்மையாக விசாரித்திருக்கவேண்டும்.

**கேள்வி: புலனாய்வின்போது ஏற்பட்ட ஏராளமான சயனைட் மரணங்கள் சி.பி.ஐ.யின் அலட்சியத்தால்தான் நடந்தன என்பதற்கு உங்கள் பதில் என்ன?**

சயனைட் என்பது விடுதலைப்புலிகளின் முக்கிய ஆயுதம்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஊடக யுத்தம் ஆரம்பம்

# விழிப்புடன் இருக்க கோருகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஊடகங்கள் தனிப்பட்டவரை மட்டுமல்ல, தாய் நாட்டைப் பற்றி உலக மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். மக்களை சரியான பாதையில் கொண்டு செல்வது ஊடகங்களின் பொறுப்பாகும். ஒரு காலத்தில் என்னையும் அமைச்சரவையின் நிருபர் என்றனர். புலிகள் இன்று ஆயுதங்களினால் அல்ல, ஊடகங்களினூடாகவே போர்ராட்டம் நடத்த ஆரம்பித்துள்ளனர் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



2012 வரவு - செலவுத் திட்ட உரையின் போது பிரகடனப் படுத்தியதற்கு இணங்க, ஊடகவியலாளர்களுக்கு மடிகணனிகளும் சிரேஷ்ட கலைஞர்களுக்கு வட்டியற்ற வாகனம் கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டத்தினை வைபவ ரீதியாக வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நிகழ்வு, அலரி மாளிகையில் நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி கூறுகையில்,

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக எழுத வேண்டும். சுதந்திரமாக கேள்விகளை கேட்க வேண்டும். அதற்கான சுதந்திரம் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைவர் ஒருமுறை, ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினார். அந்த மாநாட்டுக்கு இங்கிருக்கின்றவர்களில் சிலர் சென்றிருக்கலாம். இந்தியா உட்பட வெளிநாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் வருகை தந்திருந்தனர்.

அந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர்களே கூடுதலான கேள்விகளைக் கேட்டனர். ராஜீவ் காந்தி மரணம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பாலசிங்கம் மன்னிப்பு கேட்டமை எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது.

ஆனால், பிரேமதாஸ, லலித் அத்து லத்முதலி, காமினி திஸாநாயக்கா ஆகியோரின் படுகொலைகள், ஹரந்தலாவ, திம்புலான போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், தலதா மாளிகை, ஸ்ரீ மகாபோதி ஆகிய வணக்கஸ்தலங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பிலும் படுகொலைகள் குறித்தும் இலங்கை ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பவில்லை.

கேள்விகளைக் கேட்டிருந்தாலும் அவர்களால் பாதுகாப்பாக திரும்பியிருக்க முடியாது. எனினும், நாட்டில் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பொது மக்கள் இன்று பாதுகாப்பாக இருக்கின்றனர். தைராதரமின்றி கேள்விகளைக் கேட்கவும், திரைப்படங்களைத் தயாரிப்பதற்கும் சுதந்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கும் சுதந்திரத்தை எம்மால் பெற்றுக்கொடுக்க முடியாது.

எனினும், ஊடகவியலாளர்கள் வாழ்க்கையை உயர்த்தினால் மட்டுமே அவர்கள் சுதந்திரமாக செயற்படுவார்கள். இல்லையேல், யாருக்கும் அடிபணிந்துவிடுவார்கள். நாங்கள் யாருக்கும் கடன்கொடுக்கவில்லை. இது எங்களுடைய கடப்பாடாகும். புலிகள் அமைப்பினர் உலகில் ஊடகங்களை நடத்துவது உங்களுக்குத் தெரியும். ஊடக நிறுவனங்களை அப்படியே விலைக்குப் பெற்றுவிடுகின்றார்கள்.

ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்காகவும், பலியான தங்களுடைய அங்கத்தவர்களின் குடும்பங்களையும் பெற்றோர்களையும் காப்பாற்றி அவர்களுக்கு வாழ்வளிப்பதற்காகவும் காசு கொடுத்தவர்கள் இன்று ஊடகங்களை விலைக்கு வாங்குவதற்கு பணம் கொடுக்கின்றனர்.

புலிகள் இன்று ஆயுதங்களினால் அல்ல, ஊடகங்களினூடாக போராட்டம் நடத்த ஆரம்பித்துள்ளனர். ஊடகங்கள் தனிப்பட்டவரை மட்டுமல்ல, தாய் நாட்டைப் பற்றி உலக மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். மக்களை சரியான பாதையில் கொண்டு செல்வது ஊடகங்களின் பெரும் பொறுப்பாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வரவு – செலவுத் திட்ட பிரேரணை நாடாளுமன்றம் வருகிறது

(கொழும்பு)

7 ஆவது நாடாளுமன்றத்தின் 3 ஆவது வரவு - செலவுத் திட்டத்தின் பிரேரணைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டத்தில், ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து அதிக கவனம் செலுத்தப்படும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, 8 சத வீத பொருளாதார அபிவிருத்தியை கவனத்தில் கொண்டு வரவு - செலவு பிரேரணைகள் அமையும் என நம்பப்படுகின்றது.

அதேவேளை, எதிர்வரும் 8 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டமானது, 1947 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு வரும் வரவு - செலவுத் திட்டங்களின் 67 ஆவது என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர, இலங்கை ஜனநாயக குடியரசாக மாற்றப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் 35 ஆவது வரவு - செலவுத் திட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரவு - செலவுத் திட்டத்தின் விவாதம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகி 7 நாட்களுக்கு தொடர்ந்து இடம்பெற்று 17 ஆம் திகதியுடன் நிறைவடையும்.

# மோசடி தடுப்பு பிரிவுக்கு மூடுவிழா; பொலிஸ் திணைக்களம் அதிரடி முடிவு

(கொழும்பு)

இலஞ்ச, ஊழல் தொடர்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டமையை அடுத்து, கொழும்பு பொலிஸ் மோசடி தடுப்பு புலனாய்வுப் பிரிவு மூடப்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு கடமையாற்றிய பொலிஸாரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான நடவடிக்கையை பொலிஸ் தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

குறித்த மோசடி தடுப்பு பொலிஸ் பிரிவின் நான்கு பொலிஸ் அதிகாரிகள் மோசடிக் குற்றச்சாட்டு தொடர்பில் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

கப்பம் மற்றும் இலஞ்சம் பெற்றமை தொடர்பிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தப் பணத்தை பெறுவதற்காக குறித்த பொலிஸ் அதிகாரிகள் தொலைதொடர்பு நிலையம் ஒன்றின் உரிமையாளரை பணயம் வைத்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

# முள்ளிவாய்க்கால் படுகொலை குறித்து ஐ.நா.வின் அக்கறை திருப்தியில்லை

## - இன்னர் சிற்றி பிரஸ் சாடல் -

(கொழும்பு)

ருவாண்டா அரசு மீது அங்கு இடம்பெற்ற ஆயிரக் கணக்கான மக்களின் இனப் படுகொலைக்கு தீர்வு காண ஐ.நா. முயன்றது போல் ஏன் இலங்கையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் வைத்து இலங்கை அரசு புரிந்த தமிழ் இனப் படுகொலைக்கு தீர்வு காணவில்லை என இன்னர் சிற்றி பிரஸ், ஐ.நா. செயலர் பான் கீ மூனிடம் கேள்வி தொடுத்துள்ளது.

போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இதுவரை பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு உரிய தீர்வினை காண ஏன் ஐ.நா. நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் அந்த ஊடகம் மேலும் கேள்வி மேல் கேள்வியால் பான் கீ மூனிடம் வேள்வி செய்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது, கொல்லப்பட்டதாகக் கூறப்படும் 40 ஆயிரம் பேர் தொடர்பில் விளக்கமளிக்கப்பட வேண்டும் என இலங்கை தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் தலைவர் மர்சுகி தருஸ்மன் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இந்திய கைதிகள் வெலிக்கடையில்



(கொழும்பு)

தமிழக மீனவர்கள் 5 பேர் இலங்கை கடற்படையினரால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்கள் மீதான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

அடுத்த விசாரணை நவம்பர் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவதற்காக 5 மீனவர்களும் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

# சம்பள உயர்வுக்கு வாய்ப்பு இல்லை

## – பசில் திட்டவட்டம்



(கொழும்பு)

அரச பணியாளர்கள் இந்த முறை வரவு - செலவுத் திட்டத்தில் பாரிய சம்பள உயர்வை எதிர்பார்க்க முடியாது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.


எனினும் விதை மானியம் மற்றும் சுகாதாரத்துறைக்கான ஒதுக்கீடுகள் உரியமுறையில் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானில் இருந்து எரிபொருள் இறக்குமதி தடை உட்பட்ட பல வழிகளிலும் இலங்கை நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இந்தநிலையில் பாரிய சம்பள உயர்வை எதிர்பார்ப்பது பொருத்தமற்றது என்று பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள் ளார்.

திவிநெகும மற்றும் புரநெகும போன்ற அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நாட்டின் சுற்றுலாத்துறை முன்னேற்றப்படும் என்றும் பசில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உரிய சம்பள அதிகரிப்பு வரவு - செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படாவிட்டால், பாரிய எதிர்ப்பு போராட்டங்களை நடத்தப் போவதாக இலங்கையின் எதிர்க்கட்சிகள் எச்சரித்துள்ளன.



**யுத்தத்தில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் ஞாபக ஸ்தூபி ஒன்று குருநாகல், பொயகனே விஜயபாக ரெஜிமென்ட் இராணுவ முகாமில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உயிரிழந்த இராணுவ வீரர்களின் உறவினர்கள் கலந்து கொண் டதைக் காணலாம்.**

NSL

# நோத்சீ லிமிடெட் (வடகடல் நிறுவனம்)

நாட்டின் கடற்தொழில் துறையின் வளர்ச்சிக்கு மகத்தான சேவையினை வழங்குதல்

செயற்பாடு:

கடற்தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான வலை உபகரணங்கள் மற்றும் இதர சேவைகளை உற்பத்தி செய்து வழங்குவதனூடாக கடற்தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த அமைக்கப்பட்ட அரச நிறுவனம்.

அரச பொதுக்கம்பனி

எமது தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள்

குருநகர் – யாழ்ப்பாணம். 021 222 2733
லுனுவில – புத்தளம் . 031 225 5272
வீரவல – அம்பாந்தோட்டை. 047 223 9180
தொடர்பாடல் காரியாலயம் – கொழும்பு. 011 434 3345



(c-2039)

# அரையிறுதியில் பூபதி ஜோடி

(பரிஸ்)


பி.என்.பி. பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் இரட்டையர் பிரிவு அரையிறுதியில் விளையாட இந்தியாவின் மகேஷ் பூபதி - போபண்ணா ஜோடி தகுதி பெற்றது.

காலிறுதியில் போலந்தின் பிரிட்சன் பர்க்-மட்காவ்ஸ்கி ஜோடியுடன் மோதிய பூபதி ஜோடி 6-7 (5-7), 6-3, 6-4 என்ற செட் கணக்கில் போராடி வென்றது. இந்த வெற்றியின் மூலம் லண்டனில் நடக்கவுள்ள ஏ.டி.பி. உலக டூர் பைனல்ஸ் தொடரில் விளையாடவும் பூபதி-போபண்ணா ஜோடி தகுதி பெற்றுள்ளது.

அரையிறுதியில் பால் ஹான்லி (ஆஸி.) - ஜொனாதன் மர்ரே (இங்கி.) ஜோடியுடன் பூபதி ஜோடி மோதுகிறது.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் ஸ்பெயின் வீரர் டேவிட்பெர்ரர் 6-2, 7-5 என்ற நேர் செட்களில் ஜோ வில்பிரைட் சோங்காவை (பிரான்ஸ்) வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். கில்லஸ் சைமன் (பிரான்ஸ்), ஜெர்ஸி ஜனோவிக்ஸ் (போலந்து), மைக்கல் லோத்ரா (பிரான்ஸ்) ஆகியோரும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

# ஹபீஸை நீக்குமாறு கோரவில்லை



பாகிஸ்தான் ருவென்ரி 20 அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து மொஹமட் ஹபீஸை நீக்குமாறு நான் கோரிக்கை விடுக்கவில்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் ருவென்ரி-20 அணியின் தலைவரான மொஹமட் ஹபீஸை அப்பதவியிலிருந்து நீக்குமாறு பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுத்ததாக சில செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள டேவ் வட்மோர், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் அவ்வாறான கோரிக்கை எதனையும் நான் விடுத்திருக்கவில்லை. நான் தற்போது பாகிஸ்தானில் தங்கியிருக்கவில்லை., அத்தோடு பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் அவ்வாறான கோரிக்கை எதனையும் விடுத்திருக்கவில்லை. நான் அவ்வாறு கோரிக்கை விடுத்ததாக வெளியான செய்திகள் முழுமையாகத் தவறானவை. ஆதாரமற்றவை இந்தியாவிற்கான மிக முக்கியமான தொடருக்காகப் பாகிஸ்தான் அணி தயாராகிவரும் நிலையில் அதைக் குழப்புவதற்காக மேற்கொள்ளப்படும் சதியே இது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் இடம்பெற்ற சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 தொடரில் பாகிஸ்தான் அணி அரையிறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றிருந்த போதிலும், மொஹமட் ஹபீஸ் சில விமர்சனங்களைச் சந்தித்திருந்தார். குறிப்பாக சிரேஷ்ட வீரர் அப்துல் ரசாக்கை அணியில் சேர்க்காமை தொடர்பாக சில விமர்சனங்கள் எழுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்செஸ்டர் யுனைட்டட் வெற்றி


(லண்டன்)

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் கால்பந்தாட்டப் போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் வெற்றி பெற்றது

மன்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்கும் ஆர்சனல் கழகத்திற்குமிடையிலான போட்டியில் மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் 2-1 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

மன்செஸ்டர் யுனைட்டட் கழகம் சார்பாக 3வது, 67வது நிமிடங்களில் கோல்கள் பெறப்பட்டதோடு ஆர்சனல் சார்பாக 90வது நிமிடத்தில் கோலொன்று பெறப்பட்டது.

# தந்தையானதில் மகிழ்ச்சி



ஆர்ஜென்ரீனா அணி கப்டனும் பார்சிலோனா கால்பந்து கிளப் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி (வயது-25) - மாடல் அழகி ஆன்டோனெல்லா ரோகுஸோ தம்பதியருக்கு நேற்று முன்தினம் ஆண் குழந்தை பிறந்தது. தியாகோ மெஸ்ஸி என பெயரிட்டுள்ளனர்.

இது குறித்து தனது பேஸ்புக் பக்கத்தில் மெஸ்ஸி பதிந்துள்ள தகவலில், இன்று உலகின் மிக மகிழ்ச்சியான மனிதன் நான்தான். எனக்கு மகன் பிறந்துள்ளான்.

இந்த அற்புதமான பரிசைக் கொடுத்ததற்காக கடவுளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதேவேளை, எனது மகன் எந்தத் துறை யைத் தெரிவு செய்கிறாரோ அதற்கு நான் ஆதரவளிப்பேன்.

கால்பந்துப் போட்டிகளில் பங்கேற்கவேண்டும் என்று வற்புறுத்தமாட்டேன். ஒவ்வொருவருக்கும் தனிபட்ட இயல்பு இருக்கின்றது. அந்த வகையில் அவருடைய இயல்பு எதுவாக அமைகின்றது என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எனினும் நாட்டிற்குப் பெருமை தேடிக் கொடுக்கக்கூடிய ஒரு துறையில் அவர் விருப்பப்படுவூரேயானால் நிச்சயம் அதைவிடசந்தோஷம் எனக்கு இருக்காது என்று குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய தினம் அவர் பயிற்சியில் பங்கேற்காவிட்டாலும், செல்டா டிவிகோ அணியுடனான ஆட்டத்தில் அவர் களமிறங்குவார் என்று பார்சிலோனா அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.

மெஸ்ஸி தந்தையானதையிட்டு தாமும் மகிழ்வடைவதாகவும் மெஸ்ஸி போன்று விளையாட்டு உலகில் அவர் நட்சத்திரமாக ஜொலிக்கவேண்டும் எனவும் பார்சிலோனா அணி நிர்வாகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

# முதல் டெஸ்டை இந்தியா வென்றால் தொடரை முழுமையாகக் கைப்பற்றும்



(மும்பை)

இங்கிலாந்து அணிக்கெதிரான முதல் டெஸ்டில் இந்திய அணி வெல்லுமாக இருந்தால், டெஸ்ட் தொடரை முழுமையாகக் கைப்பற்றிக் கொள்ளும் என இந்திய அணியின் முன்னாள் கப்டன் சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.


ஒரு டெஸ்ட் தொடர் தொடங்குகிறது என்றால் அது உள்ளூர் அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்று நம்பக்கூடியவன் நான்.' ஏனெனில், உள்ளூர் சீதோஷ்ண நிலை பழக்கப்பட்டதாக இருக்கும். அது மட்டுமின்றி ஆடுகளத்தின் தன்மையையும் நன்கு அறிந்திருப்பார்கள். 2011ஆம் ஆண்டு இந்திய அணி இங்கிலாந்து, அவுஸ்ரேலிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிய போது, 4 டெஸ்டுகளிலும் தோற்றது. எப்போதுமே முதல் டெஸ்ட் போட்டி மிகவும் முக்கியமானது. இந்த தொடர்களின் போது இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகள் பலவீனமாக-வே இருந்தன. ஆனால் அந்த அணிகள் தங்களது முதல் டெஸ்ட்களில் வெற்றி பெற்றன. அதில் இருந்து தங்களது ஆதிக்கத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டன.முதல் டெஸ்ட் வெற்றியில் இருந்து புது உத்வேகத்தைப் பெற முடியும். எனவே இந்திய அணியும் இந்த தொடரில் முதல் டெஸ்டில் வெற்றி பெற்று விட்டால், அதன் பிறகு இங்கிலாந்து அணி சரிவில் இருந்து மீள்வது கடினம் தான். இந்த தொடரின் முடிவு எப்படி இருக்கும் என்பதை கணிப்பது சிரமம். ஆனால் இந்திய அணி கடந்த காலத் தோல்விக்கு பதிலடி கொடுக்கும் வகையில் 4-0 என்ற கணக்கில் முழுமை யாக வெல்லும் என்று நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## இன்று அணித் தேர்வு

இங்கிலாந்து அணிக்கெதிரான, இந்தியா டெஸ்ட் அணி தேர்வு இன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

இதில் சகலதுறை வீரர் யுவராஜ்சிங் பெரும்பாலும் இவ்வணியில் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. யுவராஜ்சிங் அணியில் இணைத்துக்கொள்ளப்படும் பட்சத்தில் ரெய்னா, மனோஜ் திவாரிக்கான வாய்ப்பு பெரும்பாலும் கிடைக்காது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# களமிறங்க அதிக வாய்ப்பு



(சிட்னி)

அடுத்தாண்டு இடம்பெறவுள்ள இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரில் நான் பங்கு பற்றுவதற்கான அதிக வாய்ப்புக்கள் உள்ளது என கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியின் கப்டன் அடம் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

41 வயதான அடம் கில்கிறிஸ்ட், 6ஆவது இந்தியன் பிறீமியர் லீக் தொடருக்கு முன்னதாக அணிகள் ஒவ்வொன்றும் தங்களுக்குத் தேவையான வீரர்களை அணியில் வைத்திருந்துள்ளது. கிங்ஸ்லெவின் பஞ்சாப் அணி என்னை அணியில் வைத்திருக்கத் தீர்மானித்துள்ளது.

கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியில் என்னைத் தொடர்ந்தும் வைத்திருக்க அவ்வணி தீர்மானித்துள்ள நிலையில் அடுத்தாண்டு இடம்பெறவுள்ள இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் நான் விளையாடுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. அடுத்த ஐ.பி.எல். பருவகாலத்திற்கான திட்டங்களை வகுத்து வருகிறோம். என்ன நடக்கும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றியிருந்த அடம் கில்கிறிஸ்ட், அவர் விளையாடிய போட்டிகளில் பெருமளவு திறமையை வெளிப்படுத்தியிருக்காததோடு, அநேகமான போட்டிகளை உடல் உபாதை காரணமாகத் தவறவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அடுத்த ஆண்டுடன் பெரும்பாலும் கில்கிறிஸ் கிரிக்கெட்டிலிருந்து முழுமையாக ஓய்வுபெற்றுவிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# 700 கோடிக்கு ஒப்பந்தம்?



கிறிஸ்டியானா ரொனால்டோவை பாரிஸ் செயின்ட் ஜெர்மெய்ன் குழுமம் 700 கோடி ரூபாவிற்கு ஒப்பந்தம் செய்யவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

போர்த்துக்கல் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோ தற்போது ஸ்பெயினில் உள்ள ரியல் மாட்ரிட் அணிக்காக ஆடிவருகிறார். இந்த சீசனில் அதிக கோல்கள் அடித்தவர்கள் பட்டியலில் ரொனால்டோ 2ஆவது இடத்தில் உள்ளார்.

இந்நிலையில் அவரை பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன் குழுமம் ரூ.700 கோடிக்கு ரியல் மாட்ரிட் அணியிடம் இருந்து வாங்க உள்ளதாக தகவல் வெளியானது. ஆனால் இதனை உடனடியாக அந்த நிறுவனம் மறுத்துள்ளது. தற்போது வரை ரொனால்டோ ரியல் மாட்ரிட் வீரராகவே உள்ளார் எனவும் தெரிவித்துள்ளது.


# விடாது தொடரும் முயற்சி இலக்கை எட்ட உதவும்

## தேசியத்தில் தங்கம் வென்ற நிதுஷன்

(அளவெட்டி)

தேசிய மட்டப் போட்டியில் தங்கம் வென்று கல்லூரிக்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்த்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். எதிர்வரும் காலங்களில் தாய்நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பது எனது கனவு என அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வீரர் பாலசுப்பிரமணியம் நிதுஷன் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியின் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் 3.50 மீற்றர் பாய்ந்து தங்கம் வென்ற பாலசுப்பிரமணியம் நிதுஷன் கல்லூரிக்கும், வடமாகாணத்திற்கும் பெருமை சேர்த்தார்.



சாதனை குறித்து எமது செய்தியாளர் தயாளபாலன், நிதுஷனிடம் கருத்துக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். சாதனை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சிறு வயதிலிருந்தே விளையாட்டில் சாதிக்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கிருந்தது.

முதலில் ஓட்டப்போட்டிகளிலேயே அதிகம் நான் கவனம் செலுத்தினேன். குறிப்பாக, 800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டப் போட்டிகளில்தான் அதிக கவனம் செலுத்தினேன். இதற்கான பயிற்சிகளிலும் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தேன்.

ஆனால், எனக்கிருந்த திறமைகளை முதலில் இனங்கண்டது எமது பயிற்றுவிப்பாளர் வாகீசன் ஆசிரியரே. கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் சாதிக்கக் கூடிய ஆற்றல் உனக்கு இருக்கின்றது. அதில் உனது முழுக் கவனத்தையும் செலுத்தி, தொடர் பயிற்சிகளில் ஈடுபட்டால் சாதிக்கக்கூடிய வீரராக ஜொலிக்க முடியும் எனக் கூறினார்.

அத்துடன் கோலூன்றிப் பாய்தல் குறித்த விளக்கங்களையும், அப்போட்டி குறித்த தொழில்நுட்பங்களையும் எனக்கு விளங்கப்படுத்தி என்னை செதுக்கிய எடுத்தவர் எனது பயிற்றுவிப்பாளரே.

அந்த வகையில் கோட்டம், வலயம், மாகாணம் என அனைத்துப் போட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்றதைத் தொடர்ந்து எனக்கும் அதில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது.மாகாண மட்டப் போட்டியில் 3.30 மீற்றர் பாய்ந்து முதலிடத்தைப் பிடித்தேன். அத்துடன் தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

எனவே, தேசிய மட்டப் போட்டிகளிலும் சாதிக்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது. இதற்கான தொடர்பயிற்சிகளை மேற்கொண்டதுடன் பயிற்சியாளரிடம் கோலூன்றிப் பாய்தல் குறித்த நுணுக்கங்கள் குறித்தும் மேலதிகமாகப் பெற்றுக் கொண்டேன்.

தேசிய மட்டப் போட்டிகளில் முதன் முறையாகப் பங்கேற்றமையால் சற்றுப் பதற்றம் இருந்தது. இருப்பினும் எனது சக வீர,வீராங்கனைகள் ஆலோசனைகள் தந்து ஊக்கமளித்தனர். அந்த உத்வேகத்துடன் பங்கேற்ற நான் 3.50 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றேன். இது என் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம். தேசிய மட்ட முதல் போட்டியிலேயே தங்கம் வென்றமை என்பது சிறப்பானது. இந்தப் பாக்கியம் எல்லோருக்கும் அமைவது கிடையாது. அந்த வகையில் முதன் முதலில் பங்குபற்றிய தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி, அதில் தங்கம் வென்று, கல்லூரிக்கும், வடமாகாணத்திற்கும் பெருமை சேர்த்ததில் மகிழ்வடைகின்றேன்.


அதற்கு என்னை இனங்கண்டு நெறிப்படுத்திய எனது பயிற்றுவிப்பாளர் வாகீசன் அவர்களே முக்கிய காரணம். அவரை என்றும் நான் மறக்க மாட்டேன். மற்றும் எனது பயிற்றுநர் சுபாஸ்கரன் அவர்களும் என்னை நெறிப்படுத்தினார். இவர்களின் நெறிப்படுத்தலே நான் தேசியத்தில் சாதிக்க வழிசமைத்தது. இவர்களது ஊக்குவிப்பு எனக்கிருக்கும் வரை என்னால் எதிர்காலத்திலும் சாதிக்க முடியும். அந்த வகையில் அவர்களுக்கு எனது விசேட நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அத்துடன் படிப்புடன், விளையாட்டில் நான் ஈடுபடுவதற்கு என்றும் ஒத்துழைப்புத் தரும் எனது பெற்றோர் என் வெற்றிக்கு பக்கபலமாக இருந்துள்ளனர்.

கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள், பழைய மாணவர் சங்கம் என அனைவருக்கும் இவ்விடத்தில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். எதிர்வரும் ஆண்டுகளிலும் கல்லூரிக்கும், வடமாகாணத்திற்கும் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி பல பதக்கங்களை வென்றுகொடுப்பேன் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இதற்கான நவீன வசதிகளுடன் கூடிய பயிற்சிகள் எமது மாகாணத்திற்குக் கிடைக்கப்பெறும் பட்சத்தில் என்போன்ற பல வீர,வீராங்கனைகள் எதிர்வரும் ஆண்டுகளில் சாதிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

கல்லூரிக்கும், மாகாணத்திற்கும் பெருமை சேர்த்தது போன்று தாய் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்பதுதான் எனது எதிர்கால இலட்சியம். அந்த இலட்சியத்தில் எனது பயணம் தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (93)

## தண்டனைக் காலம் குறைப்பு



இலங்கையைச் சேர்ந்த பளுதூக்கல் வீரர் சிந்தன கீதால் விதானகேயின் தண்டனைக் காலம் 2 வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. 4 வருடங்களாகக் காணப்பட்ட அவரது தண்டனைக்காலம் சர்வதேச பளுதூக்கல் சம்மேளனத்தால் 2 வருடங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு சீனாவில் இடம் பெற்ற ஆசிய சம்பியன்ஷிப் தொடரின் போது தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பயன்படுத்தியமை கண்டுபிடிக்கப் பட்டதையடுத்து சிந்தன கீதால் விதானகேயிற்கு 4 ஆண்டுகள் போட்டித்தடை விதிக்கப்பட்டது.

எனினும் தான்வேண்டுமென்று தடை செய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தியிருக்கவில்லை என்பதைத் தொடர்ந்து தெரிவித்து வந்த சிந்தன கீதால் விதானகே, தான் அருந்தும் பால் பொருட்களில் தடை செய்யப்பட்ட பொருட்கள் காணப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்திருந்தார்.

தனது தடைக்கெதிராக சர்வதேச பளுதூக்கல் சம்மேளனத்தில் சிந்தன கீதால் விதானகே செய்த மேன்முறையீட்டினை ஏற்றுக் கொண்டுள்ள அச்சம்மேளனம், அவரது தடையை அரைவாசியாகக் குறைப்பதாக அறிவித்துள்ளது.

இதனை அடுத்து இலங்கைக்குபொது நலவாயப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்த வீரரான சிந்தன கீதால் விதானகே எதிர்வரும் மே 13ஆம் திகதிக்குப் பின்னர் பளுதூக்கல் போட்டிகளில் பங்குபற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## யாழ். மத்திய கல்லூரியில் இலவச நீச்சல் பயிற்சி

(ய ாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூ னால் யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச நீச்சல் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் செயற்குழுவும், கொழும்பு மற்றும் யாழ்ப்பாண பழைய மாணவர்களும் இணைந்து எதிர்வரும் 22ஆம் திகதியிலிருந்து ஒரு வாரகாலம் இலவச நீச்சல் பயிற்சி முகாமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் நடத்தவுள்ளதாக, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தெரிவித்தார்.

நீச்சலில் நிபுணத்துவம் வாய்ந்த ஐந்து பேர் கொண்ட குழுவினரால் நடத்தப்படவுள்ள மேற்படி பயிற்சி முகாமிற்காக, யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 36 பாடசாலைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நீச்சல் பயிற்சி முகாம் மூலம் தற்காப்புப் பயிற்சியினை வழங்கவும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியினால் நடத்தப்படவுள்ள நீச்சல் போட்டியில் பங்குபற்றுவதற்காக மாணவர்களை தயார்ப்படுத்துவதற்காகவுமே வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## றக்பி கிண்ணம் இலங்கை வசம்



சிங்கப்பூரில் நடைபெற்ற அணிக்கு 7 பேர் கொண்ட றக்பி போட்டியில் இலங்கை அணி கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. இப்போட்டியில் இலங்கை அணி சீனாவை எதிர் கொண்டு 25 - 5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி கொண்டு கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

## விளையாட்டுச் செய்திகள்

## இம்மாத நடுப்பகுதியில்

### ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்து

(கொழும்பு)


டயலொக் ஆசி ஆட்டா பி.எல்.சி. நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்ட சம்பியன்சிப் போட்டிகள் இம்மாதம் நடுப்பகுதியில் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெறவுள்ளது.

8ஆவது தடவையாக நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வுகளில் இலங்கையிலுள்ள 300 இற்கும் மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து 50,000 இற்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதி தங்கக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகள் இரண்டிலும் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்படும் மற்றும் இரண்டாம், மூன்றாம் இடங்களுக்குத் தெரிவாகும் போட்டியாளர்கள் அனைவருக்கும் வெற்றிக் கேடயங்களும் பணப்பரிசில்களும் வழங்கப்படும் அதேவேளை சுற்றுப் போட்டியின் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு விசேட விருதுகளும் வழங்கப் படவுள்ளன.

# அறிவியல் புனைகதைகள்

- பஞ்சநதம் -



கரிச்சுரங்கங்களில் கொல்லும் வாயு இருக்கிறதா என்றறிய சுரங்கம் தோண்டுபவர்கள் கூண்டுகளில் சிறு குருவிகளை எடுத்துப் போவார்கள். அத்தகைய சிறு குருவிகளாகச் செயற்பட்டு சமூகத்திற்கு அபாயத்தை முன்னறிவிக்க உதவும் ஜீவன்களாக இருப்பவர்கள் கதாசிரியர்கள், கவிஞர்கள், நாடகாசிரியர்கள், பாடலாசிரியர்கள். சமீப காலங்களில் மேற்கில் பல அறிவியலாளர்/ சூழலியலாளர்களும் சேர்ந்து இந்த எச்சரிக்கை அறிவிப்புகளைக் கொடுக்கிறார்களீ என்பது உண்மை. அறிவியலாளர்களில் பெரும்பான்மையினருக்கு அமைப்பின் நிழலில் ஒதுங்குவதே வரலாறு என்றாலும், ஆரம்பத்திலிருந்தே அவர்கள் நடுவேயும் அமைப்பை மதிக்காத தன் முனைப்பும் இருந்திருக்கிறது. பேரரசனிடம், "சூரியனை மறைக்காதே! ஒதுங்கி நில்." என்று சொல்லி அதற்காக உயிரிழந்தார் என்ற கர்ண கதை அவர்களில் ஒருவர் பற்றித் தோன்றியதுதானே.

மேற்கின் ஒரு அளிப்பு நவீன இலக்கியம் என்றால், அந்த நவீன இலக்கியத்திலும் ஒரு குறிப்பிட்ட வகை இலக்கியம் அறிவியல் புனைவு என்கிற வகை. இதிலும் மேற்கு பெரும் முன்னெடுப்புகளை எடுத்து வைத்து உலகுக்குப் புதுப்பாதை களைக் காட்டி இருக்கிறது. அறிவியல் புனைவுகள் கர்ண பரம்பரைக் கதைகளை ஒத்த ஜிகினா வேலைகளும் கொண்டவை, அறிவியலுக்கு உரித்தான தீராத ஆர்வமும், அணையாத அறிவுத் தீயும் கொண்டவை.

மாயாஜாலங்களும், அசாதாரணத்துக்கு விழையும் சமூக இயக்கமும் சேர்ந்தியங்கும் பண்டை இலக்கியத்தின் இடத்தில் அறிவியலும், புனைகதையும் சேர்ந்தியங்கி, மனித குலம் அண்டப் பெருவெளியிலும், கால வெளியிலும் தாவிப் பயணிக்கப் போகிற யுகங்கள் பற்றிய பெருவிழைவுகளாகத் தோன்றியவை அறிவியல் புனைவுகள். இவை அனேகமாக மேலைத் தொழிற்சாலை உற்பத்திமுறை சார்ந்த சமூகங்கள் எழுகையில் தோன்றியவைதான். அன்று மேலைச் சமூகங்களில் வளிமண்டலத்தை நிரப்பிய கரிப்புகை, நீராவி, மாநகரங்களினருகில் எங்கும் கொதித்த பெரும் எரியுலைகள், மனிதரை எறும்புகளாக்கிய தொடர் சங்கிலி பொருள் தொகுப்பு உற்பத்தி முறை ஆகியன இன்று அனேகமாகக் காணாமல் போய்விட்டதென்றாலும், அப்போது தோன்றிய புனைவு முறை காணாமல் போகவில்லை. மாறாக அனேகமாக முந்தைய மாயாஜாலப் புனைவுகளே போன்றன பெருகி வருகின்றன. ஒரு அடிப்படை வேறுபாடு உண்டு. மேற்கில் தொழிலுற்பத்தி மங்கி வரலாம், அறிவுற்பத்தி இன்னும் மங்கவில்லை. புனைவுலகில் கூட மேற்கில் ஒரு சலிப்பு, தேக்கம் இருக்கிறது என்று மேலை விமர்சகர்களே அவ்வப்போது எழுதுகிறார்கள். அதே அளவு தேக்கம் அறிவியல் புனைவுகளில் இல்லை.

20ஆம் நூற்றாண்டின் இரு பெரும் ஐரோப்பியப் போர்கள், பெரிதளவும் ஐரோப்பாவில் நாசமேற்படுத்தின என்றாலும், முற்றிலும் அழிப்பைக் கொண்டு வந்தது ஒரு ஆசிய நாட்டில். அந்தப் போர்களை மனித குலம் தாண்டி விட்டது ஆனால் உலகெங்கும் சிறு போர்களை நடத்துகிறது. அழிப்பு பொருட்களில் என்பதை விட, மனிதர்களின் எண்ணிக்கையில் அதிகமாகவே ஆகிக் கொண்டிருக்கிறது. இத்தனைக்கும் போர்களில் ஈடுபடும் மனிதரெண்ணிக்கை அத்தனை கூடிவிடவில்லை, மாறாகக் குறைந்தே வருகிறது. ஆயுதங்களின் அழிப்புத் திறன் கூடுவதால் சாவுகளின் எண்ணிக்கை கூடி வருகிறது.

நேராகப் போர்களில் அழிக்கப்படுவோரை விடப் பன்மடங்கு அழிவு போர்களோடு தொடர்பில்லாத இதர பொருளுற்பத்தி முறைகளினால் நேர்கிறது. காலம் காலமாக மனிதருக்கு உணவும், ஆயுளும் அளித்த உற்பத்தி முறைகள் இன்று அவற்றின் குணம் மாறி, தற்காலிகமாக உணவும், ஆயுள் விருத்தியும் அளித்து நெடுங்காலத்தில் மனிதரையும், இதர ஜீவராசிகளையும் கொன்று பூண்டோடு அழிக்கும் தன்மை கொண்டனவாக மாறி வருகின்றன. (ஒரு உதாரணம்: அரிசித் தாவரத்தில் இன்று கூடிக் கொண்டிருக்கும் ஆர்ஸனிக்) ஒரு புறம் செவ்வாய் கிரகத்தில் ரோபோ இயந்திரங்கள் இறங்கி அங்கு தரையின் தன்மையைச் சோதித்துத் தகவல் அனுப்புகின்றன, உலகில் எந்த மூலை முடுக்கிலும் உள்ள மக்களை நாம் உடனுக்குடன் தொடர்பு கொள்ள முடிகிறது, கடிதம் எழுதி முடித்த உடன் சில விநாடிகளில் அடுத்தவரைச் சேர்கிறது, இடையிலெத்தனை ஆயிரம் மைல்கள் இருந்தாலும். இன்னொரு புறம் ஏதேதோ ஆபத்துகள் மனிதரையும் இதர ஜீவராசிகளையும் சூழ்கின்றன என்ற அபாய அறிவிப்பு ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

கடல் அமிலமாகிறது. துருவங்களின் பனி வெளிகள் உருகுகின்றன, பல மில்லியன் மக்களைக் கொல்லக் கூடிய வைரஸ்கள் வளர்கின்றன, தட்ப வெப்ப நிலை எதிர்பார்க்க முடியாத வகைகளிலெல்லாம் இயங்கத் தொடங்கி இருப்பதால் வேளாண்மை என்பது சூதாட்டமாகி வருகிறது" இத்தியாதிப் பிரச்சினைகள் தினம் செய்தித் தாள்களில் வெளி வருகின்றன. இதென்ன புதிது என்று இன்றைய இளைஞர் கேட்கலாம். ஏனெனில் அவர்கள் படிக்கத் தொடங்கிய நாளாக ஒலிக்கும் அபாய அறிவிப்புகள்தாம் இவை.

ஆனால் இந்த அபாய அறிவிப்புகளுக்கும், 1950, 60களில் ஒலித்த அபாய அறிவிப்புகளுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இன்றைய எச்சரிக்கைகள் ஒரு நாட்டுக்கானவை அல்ல, ஒரு உயிரினத்துக்குமானவை அல்ல, மொத்த இயற்கைச் சூழலே, உயிரினங்கள் அனைத்துமே அழியும் ஆபத்து நெருங்கலாம் என்ற எச்சரிக்கை. முன்பாவது ஏதோ தற்காலிக விடைகள் தோன்றி, அவை செயல்படுத்தப்பட்டன. இன்று விடைகளும் கூட குழப்படியாகவே இருக்கின்றன.

இந்தச் சூழலில் அறிவியல் புனைவுகள் எப்படி மாறி விட்டிருக்கின்றன? 40 - 70கள் வரையிலும் ஒளிர் விடும் எதிர்காலத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்த அறிவியல் புனைவுகள் கதை வெளியில் அண்ட ககனப் பயணங்கள், காலப் பயணங்கள் என்று வாசகர்களை சாகசங்களில் ஆழ்த்தின.

இன்றோ சாகசக் கதைகள் அனேகமாக இல்லை. இருக்கும் கதைகளும் விளைவுகளில் மனிதர் கிட்டத் தட்ட அழிவுநிலை அல்லது முற்றிலும் உடல் தாண்டிய வடிவுகளில் இருப்பதாக எழுதப்படுகின்றன. நினைத்ததை எல்லாம் கொடுக்கும் கனவுலகை வைத்து எழுதும் அறிவியல் புனைவாளர்கள் இன்று அனேகமாக இல்லை எனலாம். மாறாக எதிர்மாறான கற்பனை, பீதியூட்டும் அழிப்பைக் காட்டும் கற்பனை இன்று பெருகி வருகிறது. மானுடர் நம்பிக்கை இழந்து பெரும் துன்பங்களில் சிக்கி ஏதோ தத்தளித்துத் தப்பி வரும் கதைகள் பெருகி வருகின்றன. துருவர்கள் அருகி வருகிறார்கள். பகீரதர்களைக் காணோம். மார்க்கண்டேயர்கள் இல்லை. மாறாக மாரீசமும், சகுனிகளும், மஹாபாரதப் போரை ஒத்த போர்களும், தாது வருடத்துப் பஞ்சங்களும் நிறைந்த உலகம் இன்று அறிவியலாளர்களின் புனைவுகளில் உலவுகின்றது.

இதை "இருண்மை உலகு" (Dystopian world) என்று சொல்கிறார்கள்.

## விஜயகாந்திற்கு சம்பளம்!




பத்திரிகையாளர் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்திடம் சென்று அவரது கட்சி எம்.எல்.ஏ.க்கள், தமிழக முதல்வரைச் சந்தித்ததைப் பற்றி கருத்து கேட்கிறார். விஜயகாந்துக்கு விடையளிக்க விருப்பமில்லை. பதிலுக்கு "ஊரெல்லாம் கரெண்ட் இல்லை. இதைப்பத்தி போயி ஜெயலலிதாகிட்டே என்னன்னு கேளு" என்று பதில் அளித்திருக்கிறார்.

இதையடுத்துதான் ரசாபாசம் ஆகியிருக்கிறது. குறிப்பிட்ட பத்திரிகையாளரை விஜயகாந்த் ஏகவசனத்தில் "நாயே" என்று விளித்திருக்கிறார். உன் பத்திரிகையா எனக்கு சம்பளம் கொடுக்கிறது என்றும் கேட்டிருக்கிறார்.

இதையடுத்து தமிழகத்தின் அனைத்துப் பத்திரிகையாளர்களும் விஜயகாந்துக்கு எதிராக நூதனப் போராட்டம் ஒன்றினை அறிவித்திருக்கிறார்கள். அவர்களது சுவரொட்டி இது:

## சட்ட சபையில் முதலாவது தமிழ்ப்பெண்

சர்வசன வாக்குரிமையின் கீழ் முதலாவது சட்டசபைத் தேர்தல் 1931 ஆம் ஆண்டு நடைபெற்றது. அத் தேர்தலில் ஒரேயொரு பெண் வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்தார். பலாங்கொடைத் தொகுதிக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்த லீலாவதி அசரப்பா இந்தியப் பிராமணப் பெண். அவரது கணவர் கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரியான டாக்டர் சீ.வீ.அசரப்பா. ஜே.சீ.ரத்வத்தை அதிகாரம் அவருக்கு எதிரான வேட்பாளர். பலாங்கொடைத் தொகுதியில் ரத்வத்தை குடும்பத்தின் செல்வாக்கு பற்றிக் கேள்விப்பட்டதும் தன்னால் தாக்குப்பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து லீலாவதி போட்டியிலிருந்து விலகினார்.


நேசம் சரவணமுத்து


அடலின் மொலமுறே

தேர்தலில் ஆண்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்ட போதிலும் சிறிது காலத்தில் இரண்டு பெண்கள் சட்ட சபையில் அங்கத்துவம் பெற்றனர். றுவான்வெலைத் தொகுதியில் போட்டியின்றித் தெரிவாகிய மீதெனிய அதிகாரம் மூன்று மாதங்களின் பின் மரணமடைந்ததால் அத்தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் அவரது மகள் அடலின் மொலமுறே வெற்றி பெற்றுச் சட்டசபை உறுப்பினரானார்.

கொழும்பு வடக்குத் தொகுதியிலிருந்து தெரிவாகிய ரட்ணஜோதி சரவணமுத்துவின் தெரிவு செல்லுபடியற்றதெனத் தேர்தல் ஆட்சேபனை வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டதால் அங்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் அவரது மனைவி நேசம் சரணவமுத்து வெற்றி பெற்றுச் சட்டசபைக்குச் சென்றார். இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்து வேம்படி மகளிர் கல்லூரியில் கல்விகற்றவர்.

நேசத்தின் தெரிவும் செல்லு படியற்றது என்று தேர்தல் ஆட்சேபனை வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்ட போதிலும் அவர் மீண்டும் போட்டியிடுவதற்கு தடை இருக்கவில்லை. கொழும்பு வடக்குத் தொகுதியில் நடைபெற்ற இரண்டாவது இடைத் தேர்தலிலும் நேசம் சரவணமுத்து வெற்றி பெற்றார். 1936 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது சட்டசபைத் தேர்தலிலும் நேசம் சரவணமுத்து வடகொழும்பிலிருந்து தெரிவாகினார். இவரது கணவர் ரட்ணஜோதி சரவணமுத்து 1937 இலும் 1941 இலும் கொழும்பு மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

1941 ஜனவரி 19 ஆம் திகதி (கணவன் மாநகர முதல்வராக இரண்டாவது தடவை பதவியேற்ற பதினோராவது நாள்) நாற்பத்தி நான்காவது வயதில் நேசம் சரவணமுத்து மரணமடைந்தார்.

# பொக்கை வாய்கள் சிரிக்கட்டும்!

பெரியவர்களை, "தாத்தா" "ஐயா" என்று மரியாதையுடன் அழைத்த காலமெல்லாம் போய், "யோவ் பெரிசு" "அட கிழவா" என்று அழைக்கிற காலம் வந்திருக்கிறது. பெற்றவர்களைக் கூட பாரமாக நினைத்து, அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்க்கின்றனர் பிள்ளைகள். பெரியவர்களுக்கு மரியாதை தர தவ-றினால், நிலைமை என்னாகும் தெரியுமா?

இந்திரத்துய்மன் என்ற மன்னன் அகத்தியரை தன் குருவாகக் கொண்டவன். பெருமாள் பக்தன். ஒருமுறை, அகத்தியர் அவனது அவைக்கு வந்தார். அப்போது மன்னன் கேளிக்கை விளையாட்டுகளில் மூழ்கியிருந்தான். குரு வந்திருப்பதாக அவனுக்குத் தெரிந்தும், விளையாட்டு மும்முரத்தில் அவருக்கு மரியாதை செலுத்த செல்லவில்லை. இதுகண்டு குமுறிய அகத்தியர், தன்னை மதிக்காத மன்னனை, யானையாக மாற சாபம் விடுத்தார். மன்னன் மன்னிப்பு கேட்டபோது, வனத்தில் பல காலம் சுற்றித் திரிந்து, பெருமாளின் அருளால் மோட்சம் பெறுவாய் என சபித்தார். இந்திரத் துய்மனும் யானையானான். அதற்கு, கஜேந்திரன் எனப் பெயர்.

இதேபோல, கபில முனிவர் ஒருமுறை, ஆற்றில் நீராடச் சென்றார். கந்தர்வன் ஒருவனும் நீராடிக் கொண்டிருந்தான். அவன், தண்ணீருக்குள் மூழ்கிச் சென்று, முனிவரின் காலைப் பிடித்து இழுத்து சில்மிஷம் செய்தான். கோபம் கொண்ட முனிவர், "தண்ணீரில் மறைவாக வந்து காலைப் பிடித்து இழுத்த நீ, முதலையாக பிறப்பாய்...." என சாபமிட்டார். அவனும் சாப விமோசனம் கேட்ட போது, "பிற்காலத்தில் விஷ்ணுவின் கரத்தால்



மோட்சம் பெறுவாய்" என்றார். அந்த முதலை, "கூஹு" என்ற பெயருடன் ஆற்றில் கிடந்தது.

ஒரு சமயம், கஜேந்திர யானை, தன் கூட்டத்துடன் தண்ணீர் குடிக்க வந்தது. உள்ளே கிடந்த முதலை, அதன் காலைக் கவ்வியது. இரு விலங்குகளுக்கும் கடும் போராட்டம் நடந்தது. உடன் வந்த யானைகளோ, உதவி ஏதும் செய்யாமல், உயிருக்குப் பயந்து கரையேறி விட்டன. பெரியவர்களுக்கு மரி யாதை தராதவர்களுக்கு மறுபிறப்பில், உறவுகளின் ஒத்துழைப்பு கிடைக்காது என்பது இதன் மூலம் உணர்த்தப்படும் தத்துவம்.

இந்நேரத்தில், கஜேந்திர யானைக்கு சாப விமோசன நேரம் வந்தது. தன் உயிர் போகும் நேரத்திற்குள் பெருமாளை வணங்க எண்ணி, ஆற்றில் இருந்த தாமரை மலரைப் பறித்தது "ஆதிமூலமே" எனக் கதறியது.


இந்த சத்தம், வைகுண்டத்தில் பெருமாளின் காதில் கேட்டது. கருடன் விரைந்து வந்தார். கருடன் மீதேறி, லட்சுமியும், பெருமாளும் ஆற்றிற்கு வந்தனர். சக்கரத்தை வீசி முதலையை அழித்தார் பெருமாள். சக்கரத்தின் மகிமையால் முதலை மோட்சம் அடைந்தது. கஜேந்திரன் விடுபட்டது.

யானையைப் பிடித்ததாவது ஒரே ஒரு முதலை தான்! ஆனால், மனிதர்களாகிய நம்மை, கண், காது, மூக்கு, வாய், உடல் எனும் ஐந்து முதலைகள் பிடித்துக் கொண்டிருக்கின்றன. பணம், வீடு, வாசல், பெண் போன்ற பல சுகங்கள் வேண்டுமென இந்த முதலைகள், இளைஞர்களை பாவச் சேற்றில் தள்ளி விடுகின்றன. இதன் விளைவு, பெரியவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் மறைந்து விட்டது.

விஷ்ணு சீனிவாசனாக பூமிக்கு வந்தது புரட்டாசி மாதம், திருவோண நட்சத்திரம், சனிக்கிழமை என்று சொல்வது மரபு. இதனால் புரட்டாசி சனி அன்று, விரதமிருந்து விஷ்ணு வணங்கப்படுகிறார். அன்று, வீட்டுப் பெரியவர்களையும் பெருமாளாக எண்ணி, அவர்களுக்கு மரியாதை தர வேண்டும். "பெருமாள்" என்ற சொல்லுக்கே, "பெரிய ஆள்" என்று தான் பொருள். இனியேனும், நம் இல்லங்களில் பொக்கை வாய்கள் சிரிக்கட்டும்.

# சீர்காழி கோவிந்தராஜன்

சீர்காழி கோவிந்தராஜன் குரலில் மெலடி கிடையாது. முரட்டு குரல். டி.எம்.எஸ் குரலில் உள்ள "கனிவு" "தண்மை" "குழைவு"



"ISAIMANI", "PADMASHRI",
DR. SIRKALI S. GOVINDARAJAN

சீர்காழியிடம் அறவே கிடையாது.

பாடும்போது ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு விடுவார். நான் பாடுவதில் மேதையாக்கும் என்ற கர்வம் குரலில் வெளிப்படும். தமிழ் உச்சரிப்பு சுத்தம். ஆனால் தேவைக்கு மேல் அழுத்தம் கொடுத்து வார்த்தைகளை கடித்து விடுவார்.

அந்தக் காலத்தில் பல தமிழ் படங்களில் கதாநாயகி கலங்கி தவித்து தக்காளி விற்கும்போது சீர்காழி உருக்கத்துடன் "துள்ளி வரும் சூறை காற்று துடிக்குதொரு தென்னம்தோப்பு இல்லை பாதுகாப்பு இது தானா இறைவன் தீர்ப்பு......காவல் இல்லா கன்னி என்றால் கண்கலங்கும் வாழ்க்கை உண்டு" என்று கதறுவார். "நீதி மத யானை வீதிவழி சென்றதம்மா!" என கேவுவார். சிகரட் பிடிக்க, ஒண்ணுக்கு அடிக்க பலரும் எழுந்து போவார்கள்.

சில பாடல்களை சவால் போல பாடி விடுவார். டி.எம்.எஸ் "முருகா என்றழைக்கவா? முத்துக்குமரா என்றழைக்கவா?...எப்படி அழைப்பேன் உன்னை எங்கே காண்பேன்" என்று உருக்கமாய் பாடியதற்கு,

சீர்காழி எதிர்ப்பாட்டு "முருகா என்றழைத்தால் என்ன? கந்தா என்றழைத்தால் என்ன? கார்த்திகேயன் என்றால் என்ன?... எப்படியும் அழைக்கலாம்! எங்கிருந்தும் காணலாம்"

சீர்காழியின் நளினமற்ற பாட்டுக்கு ஒரு உதாரணம். "வாழையடி வாழை" படத்தில் டூயட் பாட்டு "ஹல்லோ! ஸ்வீட்டி அல்லோ!" தியேட்டரில் படம் பார்ப்பவர்கள் சிரித்து விடுவார்கள்.

"திருச்செந்தூரின் கடலோரத்தில் செந்தில் நாதன் அரசாங்கம்" பாட்டில் டி.எம்.எஸ் குரலை அமுக்கி உரத்துப் பாடுவார்.

பல பாடல்களை கணீரென்று தன் வெண்கல குரலில் அற்புதமாக பாடியிருக்கிறார் சீர்காழி. அந்தப் பாடல்கள் அவருக்கானவை மட்டுமே. அப்படி சில பாடல்கள்:

1. அமுதும் தேனும் எதற்கு? நீ அருகினில் இருக்கையிலே எனக்கு"
2. பணம் பந்தியிலே! குணம் ...பையிலே!
3. எங்கிருந்தோ வந்தான்! ... சாதி நான் என்றான்!
4. தேவன் கோயில் மணி யோசை நல்ல சேதிகள் சொல்லும் மணியோசை.
5. ஓடம் நதியினிலே ஒருத்தி மட்டும் கரையி-னிலே.
6. உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதென்பது.
7. மரணத்தை எண்ணி கலங்கிடும் விஜயா!
8. ஒற்றுமையாய் வாழ்வதாலே என்றும் நன்மையே.
9. தட்டு தடுமாறி நெஞ்சம் கை தொட்டு விளையாட கெஞ்சும்
10. சின்னஞ்சிறு பெண்போலே சிற்றாடை இடை உடுத்தி (பக்திப் பாடல்)
11. அழைத்தவர் குரலுக்கு வருவேன் என்றான் கீதையிலே கண்ணன்.
12. கண்ணிலே நீர் எதற்கு காலமெல்லாம் அழுவதற்கு.
13. ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா.
14. கல்லிலே கலைவண்ணம் கண்டான்.
15. நீயல்லால் தெய்வம் இல்லை எனது நெஞ்சே நீ வாழும் எல்லை. (பக்திப் பாடல்)

மூன்று டைட்டில் பாடல்கள். தியேட்டரில் கைதட்டு வாங்குவார்.

1. காதலிக்க நேரமில்லை காதலிப்பார் யாரும் இல்லை.
2. வெற்றி வேண்டுமா போட்டுப்பாரடா எதிர் நீச்சல்.
3. வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்.

சீர்காழியை முழுமையாக ஒதுக்கவே முடியாது.

❁ பிரெஞ்ச் தத்துவஞானி வோல்டேரிடம் 80 கைத்தடிகள் (வோக்கிங் ஸ்டிக்) இருந்தன. 18 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் ஆண்களும் பெண்களும் கைத்தடிகளுடன் செல்வது நாகரிகமாகவும் பெருமைக்குரியதாகவும் கருதப்பட்டது. பெண்கள் வைத்திருந்த கைத்தடிகள் உட்பகுதியில் சென்ட் போத்தல்கள், மியூசிக் பொக்ஸ் போன்றவற்றை மறைத்து வைத்திருந்தார்கள்.

❁ 1920ஆம் ஆண்டில் ரியல் எஸ்டேட் வர்த்தகம் சூடுபிடித்திருந்தபோது அதில் முதலீடு செய்து வாரந்தோறும் 2,500 டொலர் சம்பாதித்து வந்த அமெரிக்க நாவலாசிரியரும் நாடக ஆசிரியருமான பென் ஹெச்ட், தான் சம்பாதிக்கும் பணத்தை வங்கிகளில் பேட்டு வைப்பதற்கு நம்பிக்கையில்லாமல் எங்கு சென்றாலும் ரூபாய் நோட்டுக் கட்டுகளை கூடவே தூக்கிச் செல்வாராம். அவ்வாறு சுமந்து செல்வதை அவர் சுமையாகவும் கருதவில்லை.

❁ எகிப்து ராணியாக கிளியோபட்ரா முடிசூட்டிக்கொண்டபோது

# வல்லுவம்



அவரது வயது 18. பேரழகியாக வர்ணிக்கப்பட்ட அவர், பண்டைய காலத்தில் வெளியிடப்பட்ட அவரது உருவம் பொறித்த நாணயங்களில் நீண்ட மூக்கும் ஆண்மைத்தனமும் கொண்டவராக தோற்றமளித்தார். வசீகரிக்கும் அழகும் இனிமையாகப் பாடும் குரலும் கொண்ட அவர் புத்திசாலியாகவும் விளங்கினார். எகிப்திய மொழியை பேசத் தெரிந்த முதல் பாரோ இனத்தவரான இவருக்கு 9 மொழிகள் பேசத் தெரிந்திருந்தன.

❁ தேசிய மகளிர் வாக்குரிமை சங்கம் அமைத்ததில் ஆலிஸ் ஸ்டோன் ப்ளாக்வெல் என்ற பெண்மணிக்கு பெரும் பங்கு உண்டு. 1848-ம் ஆண்டு முதன்முதலாக மகளிர் உரிமை மாநாடு நடத்தியவரும் இவர்தான். ஆனால் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியபோது இவர் உயிருடன் இல்லை.

❁ "Philo" என்றால் அன்பு, மையல். "sophy" என்பது அறிவுத் தேவதை. அறிவை மட்டுமே காதல் கொள்வது Philosophy என்ற தத்துவ நெறி.

❁ அயிராவதம் என்பது இந்திரனுக்குரிய வெள்ளை யானை. அயிராவணம் என்பது சிவபெருமானுக்குரிய யானை!

# எனது நினைவுத் தடங்களில்

## நவ மகாஜனா சிற்பி தெ.து.ஜயரத்தினம் நினைவுப் பேருரை - 2012

ஈழத்தின் புகழ்பூத்த சிற்பியும், மகாஜனாவின் ஆசிரியருமான அமரர் கலாகேசரி தம்பித்துரை அவர்கள், தனது நூல் ஒன்றில் கண்ணியம்" என்ற சொல் திரு. ஜெயரத்தினம் அவர்களுக்காகவே தான் பிறந்தது. என்கிறார் திரு. ஜெயரத்தினம் அவர்கள் தான் கண்ணியமாக நடந்ததோடு சக ஆசிரியர்களையும் கண்ணியமாக நடத்தினார். மகாஜனாவின் குடும்ப பாசத்தை வளர்த்தார். என குறிப்பிட்டிருந்தார்.

இத்தகைய உறவு நிலையை ஜெயரத்தினம் அவர்கள் மேற்கொண்டதாலேயே மகாஜனா கல்வி மற்றும் பல இதரதுறைகளிலும் முதன்மை பெற்று, இலங்கையில் புகழ்பூத்த பாடசாலையாக புகழ்க் கொடி நட்டியது எனவும் மேலும் அவர் குறிப்பிடுகின்றார்.

1970 வரை அரை நூற்றாண்டுகள் அவரது ஈடுபாடு பாடசாலையுடன் இணைந்திருந்தமை, அதன் வளர்ச்சிக்கு உந்து விசையாக செயற்பட்டது. அவரின் வழிகாட்டல் ஆசிரியர்களின் பட்டம் பதவியால் பிரிவு படாமல், ஒருவருக்கொருவர் உதவும் மனப்பாங்கை வளர்த்தது. மகாஜனா வெற்றியின் மந்திரம் இதுவே எனக் கூறல் பொய்யாகாது.

அதிபர் ஜெயரத்தினம் அவர்களின் ஆங்கிலப் புலமை மிக உயர்வானது. அவருடன் இணைந்து செயற்பட்ட உப அதிபர்கள் திரு. சின்னத்தம்பி, திரு. ராமசாமி, திரு.மகாதேவா போன்றோரும் ஆங்கில அறிவில் உன்னத நிலையில் இருந்தார்கள் இவர்களையும் பிற ஆசிரியர்களையும் இணைத்து ஆங்கிலக் கல்வியின், மொழிப் பிரயோகத்தின் தேவையை உணர்ந்து, மகாஜனாவின் பல்வேறு செயற்பாடுகளிலும் புகுத்தி மாணவரிடையே அவ்வாற்றலை விரிவு படுத்தினார். பரிசில்தினம், A/L இராப்போசன விருந்து, Junior மாணவர்களுக்கான Morning Assembly என்பன அவற்றுள் சிலவாகும்.

அத்துடன் துரையப்பா மண்டபத்தை சுற்றி நான்கு மூலையிலும் நிறுத்தப்பட்டிருந்த "Speak in English" Board இங்கு குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

அவர் மேற்பார்வைக்காக காலை, மாலை நேரங்களில் வகுப்பறைகளை சுற்றிப்பார்க்கும் வேளை ஒரு வகுப்பு free ஆக இருப்பதை கண்டால் போதும், அங்கே புகுந்து English Grammar போன்ற விடயங்களை மிக்க ஆவலுடன் கற்பிப்பார். இது தூர நோக்குடன் மேற்கொண்ட ஒரு செயற்பாடாகும்.

A/L இராப்போசன உணவு அருந்தும் முறை முதலாக பலசெயற்பாடுகள் மேலைத்தேய முறைப்படி இடம் பெற்றதும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இச் செயற்பாடுகளால் சகோதரத்துவ உணர்வுடன் பிற பாடசாலைகளுடன்; மகாஜனாவின் பண்பாடு பேணப்பட்டு குடாநாட்டு பாடசாலைகள் வியக்கும்படி மகாஜனா திகழ்ந்தது. அத்துடன் இந்தச் செயற்பாடுகள் மகா ஜனங்களை சுமுதாயத்தில் உயர் மட்டத்திலுள்ளவர்களுடனும் சரி நிகராக திகழ வைத்தது அதற்கு உதாரணமாக இங்கு பிரதம அதிதியாக வீற்றிருக்கும் எனது நண்பன் திரு.செல்வஸ்கந்தனை எடுத்துக்கொள்ளலாம்.

போதிய பொருள்வசதி இல்லா வேளையிலும் ஆசிரிய வளத்தை முற்றாக அர்ப்பணிப்புடன் பெற்று, கல்லூரியை வளர்த்தெடுத்தமையால் இன்று மகாஜனாவின் பிள்ளைகள் உலகளாவிய ரீதியில் பரந்து அங்கே இணைந்து கல்லூரி சிறப்புடன் வளர தம்மாலியன்ற அனைத்தையும் செய்து வருகிறார்கள்.

அவர் அறிமுகமாகிய, மகாஜன விழாக்களில் பழைய மாணவர்கள் விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கும் கலாசாரம் இன்றளவும் கடைப்பிடிக்கப்படுகிறது.

சைவ சமய கலாசாரத்தை காப்பதற்காக பாவலர் ஸ்தாபித்த பாடசாலை, அவர் வழிவந்த அதிபர் ஜெயரத்தினம் அவர்களால் முறையாக முன்னெடுக்கப்பட்டு, மேலும் பல சமய நிகழ்வுகளை பாடசாலையில் இடம் பெறச் செய்து, மாணவரிடமும் சமய உணர்வை வளர்த்தெடுத்து, அச்செயற்பாட்டின் தொடர்ச்சியாக ஓய்வின்பின் தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தின் தலைவராகப் பொறுப்பேற்று ஆலயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றினார்.

இத்தகைய பல்துறை விற்பன்னராக, யாழ்ப் பாணத்தின் புகழ்பூத்த ஒரு சில அதிபர் வரிசையில் உயர்திரு. ஜெயரத்தினம் அவர்களும் ஒருவராக, எல்லோராலும் மதிப்பளிக்கப்பட்டார். அன்றளவும் அந்தப் பெரும்புகழ் நிலைத்திருக்கிறது. இதற்கு உலகளாவிய ரீதியில் வெளியீட்டு விழா கொண்டாடிப் பெருமைபெறும் "எம்மை வாழ வைத்தவர்கள்" எனும் நூல்சான்றாகும்.

"வெல்லுக மாஜன மாதா!" எனும் கோஷத்தையே தனது குறிக்கோளாகக் கொண்ட அதிபர் அவர்கள் 1970 இல் ஓய்வடைந்த போது அவருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை நிகழ்வுகளே, அவருக்கு மகாஜன சமூகம் எவ்வளவு கடமைப்பட்டது. என்பதை எடுத்துக்காட்டியது.

அக்கால கல்வி அமைச்சின் செயலர் உயர்திரு. ஆர். பாஸ்கரலிங்கம், மகாஜனன் - உட்பட பல சான்றோர்கள் கலந்து சிறப்பித்த அவ்விழாவை இன்றும் என் மனதில் கண்டு மகிழ்கிறேன்.

இப்பிரதேச மக்களை மட்டுமல்ல. இலங்கைத் தீவின் பல மூலைகளிலும் இருந்து பாடசாலைக்கு வந்த பலரை, அறிஞராக, விற்பன்னராக, உலகப் புகழ் எல்லாம் பெறுபவராக ஆக்கி அனுப்பிய, எமது இந்தப் பாடசாலையும் அதிபர் ஜெயரத்தினம் அவர்களின் பெயரும், காலம் முழுவதும் நிலைத்திருக்கும் என்பதிலே எமக்கு ஐயமில்லை.

கல்லூரியின் விளையாட்டு வீரர்களுக்கும் குழுக்களுக்கும் அதிபர் அவர்கள் உற்சாகப்படுத்தியவிதம் என்னை வியக்க வைத்தது. வீரர்களையும், குழுவையும் தனது அலுவலகத்திற்கு அழைத்து உரையாடி வாழ்த்தி அனுப்புவார். அதிபரின் புன்னகையும் அழகான ஆங்கில உரையும் எம்மை உற்சாகப் படுத்தியது மட்டும் அல்லாமல் எங்களைப் போன்றோருக்கு ஒரு தனியிடத்தையும் தந்தது. 1969 - 70 ஆண்டுகளில் மகாஜனாவின் உதைபந்தாட்டக்குழு அகில இலங்கை பாடசாலைகளின் மட்டத்தில் சம்பியன் ஆன போது அவர் மட்டற்ற மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். வெற்றிபெற்ற குழுக்களுக்கு விசேட விருந்து கொடுத்து கௌரவிப்பார்.



அகில இலங்கை பாடசாலை Hockey குழுவின் உபதலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது என்னை அலுவலகத்திற்கு அழைத்து வாழ்த்திக் கௌரவித்தார். அதிபர் ஓய்வு பெற்று சில வருடங்களுக்கு பின் நற்சான்றிதழைப் பெற அவரிடம் சென்றேன். உடனடியாக என்னை அமரச் சொல்லிவிட்டு என்னைப் பற்றி சகல விடயங்களும் எழுதி என்னிடம் சில நிமிடங்களில் தந்தார். நான் ஒன்றும் கூறாமலேயே எல்லாவற்றையும் பற்றி திருத்தமாக எழுதியிருந்ததைப் படித்து அவரின் ஞாபக சக்தியை நினைத்து, வியப்டைந்தேன்.

கல்லூரி கிரிகெட் அணி Hockey அணிகளின் தலைவனாகவும் தரப்படுத்தல் நாட்களில் பல்கலைக் கழகம் புக எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. மகாஜனா எனக்கு தந்த உயர்வான விருது.

அடுத்த வருடம், அந்தப் புகழுக்குரியவரின் நூறாவது ஜனனதினத்தை வெகு சிறப்புடன் கொண்டாட மகாஜன சமூகமே எதிர்பார்த்திருக்கும் வேளையிலே, இத்தகைய, அவரது நினைவுகளை மீட்கக்கூடிய ஒரு உரையை ஆற்ற எனக்கு வாய்ப்புக் கிடைத்தமையை ஒரு பேறாகவே நான் எண்ணுகிறேன்.

அவர் வளர்த்த மகாஜனா வாழ்க எனக்கூறி, என் உரையைப் பூர்த்தி செய்கிறேன்.

**Dr.R.மகேந்திரா**
**B.B.Sc.(Pera).M.B.A(Sri.J)**

# இலக்கியத்தில் பெண்கள்

இலக்கியம் என்பது ஒரு கால வரலாற்றினை படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி ஆகும். அதாவது வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடம் என்பது போல சமுதாய வாழ்வைப் பிரதிபலிப்பதே இலக்கியமாகும். இலக்கியங்கள் எப்போதும் நல்ல இரசனை உடையனவையாகவும், கருத்துப் பொதிந்தவையாகவும் அமைந்திருப்பது இலக்கியங்கள் கொண்டுள்ள சிறப்பம்சமாகும். அத்துடன் இலக்கியத்தில் பெண்கள் என்ற பாங்கினை நோக்குமிடத்து அவை பெரும்பாலும் தெய்வீகத்தன்மை பொதிந்தவையாக காணப்படுகின்றமை இலக்கியங்களை பட்டை தீட்டி மிளிரச் செய்வது போல் உள்ளது.

அந்த வகையில் தொகுத்து நோக்குமிடத்து இலக்கியத்தில் பெண்களென்ற வகையில் ஔவையார், காக்கைப் பாடினியார், காரைக்கால் அம்மையார் போன்றவர்கள் அவிசுக்குள் பயறாக இலக்கியங்களில் கலந்திருந்தாலும் அவர்களுடைய வரலாற்றுப் பாதையானது இலக்கியப்பரப்பில் பாரிய இடத்தைப் பெற்றுள்ளமை சிறப்பு அம்சமாகும்.

ஔவையாரைப் பொறுத்தவரையிலும் அவருடைய சகல துறைகளிலும் இறை தன்மை பொதிந்திருப்பது வாழுகின்ற மக்களையும், வாழப்போகும் சமுதாய மக்களின் வாழ்வினையும் நம்பகத்தன்மை



உடையதாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் அவற்றை கடைப்பிடித்து வாழக் கூடிய வகையில் அமர்ந்திருப்பதாவது இலக்கியத்தில் பெண்கள் பெற்றுள்ள பங்கினை மேலும் விரிவுபடுத்துகின்றது.

ஔவையாரின் நூல்கள் இயற்கைப் பொருட்களையும், இறைவனையும் கதாபாத்திரங்களாக வைத்து இவர் பாடிய அத்தனை நூல்களுமே அருஞ்சுவையும், ஆழமும் புதைந்தவையாக விளங்குகின்றன.

ஒரு பிள்ளை பிறந்து இறந்து இறைவனடி சேரும் வரை வாழ்வியலில் இடையில் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு ஔவையார் காட்டியுள்ள அத்தனை வழிகளும் சுருங்கக் கூறி விளங்க வைப்பதற்காக அமைந்துள்ள ஒரு பெரும் இலக்கிய சாரலையே தந்த நிற்கின்றது.

இது தவிர காரைக்காலம்மையார் என்னும் இலக்கியப் பெண் இல்லற வாழ்வை இறையியல் வாழ்வாக அமைத்துக் காட்டியிருப்பதாவது அவரின் வாழ்வியல் இலக்கியத்தைப் பெரிதும் காட்டி நிற்கின்றது. இல்லறத்தையும், இறையியலையும் நாணயத்தின் இரு பக்கங்களாகக் கொண்டு வாழ்ந்த காரைக்காலம்மையார் ஈற்றிலே இல்லறத்திலும் இறையியல் உயர்ந்தது என்பதை எடுத்துக் காட்டி நிற்கின்றனர்.

இத்தன்மையானது உலகியலில் இறை நம்பிக்கை உயர்வையும், இல்வாழ்வின் அர்த்தத்தையும் நல்ல பாடமாகக் கற்பித்து நிற்கின்றது. இல்வாழ்வு நிலையற்றது இறையியல் நிரந்தரமானது என்பதை காரைக்கால் அம்மையார் சார்ந்த இவ் இலக்கியம் அவர் என்முருவாக இறையடி சேர்ந்த தன்மையினை இலக்கிய வாழ்விலொரு பெரும் இடத்தைப் பெற்று நிற்கிறது எனலாம்.


இவை தவிர புனிதவதியார், அன்னை திரேசா போன்றோரும் குறிப்பிடத்தக் கவராவார்.

இலக்கியம் கண்ணாடி போன்றதாக அமைந்தாலும் எந்த ஒரு காலப்பரப்பிலும் உடைய வலிமையும் அழியாப் புகழையும் தன்னகத்தே கொண்டிருப்பதாவது சிறப்புத் தரும் அம்சமாக விளங்குகின்றது. இது வரைகால சமுதாயத்திலும் பெண்கள் இலக்கியங்களில் தோன்றுமளவிற்கு இல்லாவிடிலும் ஔவையார் போன்ற அழியாப் புகழைப்பெற்ற பெண்கள் இலக்கியத்தில் இடம்பெற்றமை இலக்கியத்தில் பெண்களென்ற பரப்பில் பாரிய இடத்தினைப் பற்றி நிற்கின்றது என்றால் யாரும் மறுப்பதற்கும் இல்லை. மறைப்பதற்கும் இல்லை.

**: உ.சபித்தா**
**தரம் - 10**
**மு/யோகபுரம் மகா வித்தியாலயம்**

# அதிகரித்துள்ள கடன்களுக்கு மாற்றீடாக குறைந்த வட்டியை வழங்க வேண்டும்

## - யாழ்.வணிகர் கழகத் தலைவர் கோரிக்கை-



(யாழ்.நிருபர்)

நாம் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தற்போது அதிகரித்துள்ள கடன்களுக்கான வட்டி வீதங்களை எங்களால் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே எமக்கு இலங்கை வங்கி குறைந்த வட்டியில் கடன்களை வழங்க வேண்டும் என யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை இலங்கை வங்கியின் சிறிய நடுத்தர வியாபார முயற்சியாளர்களுக்கான ஆலோசனை அலகின் யாழ்ப்பாணக்கிளை திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்பகுதி வர்த்தகர்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது எமது வர்த்தகர்கள் மிகவும் பின்தங்கியவர்களாக காணப்படுகின்றனர். தனியார் வங்கிகள் குறைந்த வட்டிக்கு கடன் வழங்குவதாக கூறி சில காலங்களில் அதன் வட்டி வீதங்களை அதிகரிக்கின்றன. இதனால் கடனை மீளச் செலுத்த முடியாது திண்டாடுகின்றனர். இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் சுமார் பத்து வீதமான வணிக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. வணிகர் கழகத்தினராகிய நாம் இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்யுமாறு மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட பலரிடம் கேட்டிருந்தோம்.

ஆனால் அவர்கள் நாடு முழுவதுக்குமான வட்டி வீதமே யாழ்ப்பாணத்திலும் அறவிடப்படுகிறது என கூறுகின்றார்கள்.

பல வங்கிகள் கடன்களை வழங்கி வந்தன. பின்னர் வழங்கிய கடனை மீளப் பெற முடியாத தாமத நிலை ஏற்பட்டவுடன் அவை தமது கடன் வழங்கலை நிறுத்திக்கொண்டனர்.

ஆனால் இலங்கை வங்கி அவ்வாறு செய்யவில்லை. நெருக்கடிகளிலும் தொடர்ந்து கடனை வழங்கி எமது வர்த்தகர்களுக்கு உதவிவந்தது.

அதுபோல் பாதிப்புகளுக்குள்ளாகி இருக்கும் எமக்கு இலங்கை வங்கி குறைந்த வட்டி வீதத்தில் கடனை வழங்கி நாம் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைய உதவிட வேண்டும் என்றார். (54)

# பாடசாலைக்கு வாத்தியக்கருவிகள் கையளிப்பு

(யாழ்ப்பணம்)

யாழ்.நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலைக்கான பான்ட் வாத்தியக் கருவியை ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) பாடசாலை அதிபரிடம் கையளித்துள்ளார்.

மேற்படி பான்ட் வாத்தியக் கருவி நாடாளுமன்ற உறுப்பினரின் இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இதன்போது நல்லூர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் கலந்துகொண்டார்.

# கல்வயல் விவசாயிகளுக்கு மானிய உரவிநியோகம்

(சாவகச்சேரி)

கல்வயல் விவசாய சம்மேளன பயனாளிகளுக்கு இன்று திங்கட்கிழமை இரண்டாம் கட்ட மானிய உரவிநியோகம் இடம் பெறும்.

பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளும் கல்வயல் விவசாய சம்மேளனத்தில் பதிவுகளை மேற்கொண்டு முதலாம் கட்ட மானிய உரம் பெற்ற பயனாளிகளுக்கு இன்று இரண்டாம் கட்ட மானிய உரம் வழங்கப்படும் என்று கல்வயல் விவசாய சம்மேளனத்தின் செயலாளர் கா.வேதநாயகம் தெரிவித்தார்.

இன்று காலை 9.00 மணியிலிருந்து 4 மணிவரை புத்தூர் சந்தி மீசாலையில் அமைந்துள்ள கமநல சேவைகள் நிலையத்தில் வழங்கப்படும். இன்று உரமானியம் பெறத்தவறும் பட்சத்தில் அவற்றை இருவாரங்களின் பின்னர் பெற்றுக் கொள்ள முடியும் என செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தை கற்கும் மாணவர்களுக்கான செயல்முறை வழிகாட்டல் பயிற்சிப்பட்டறை இன்று காலை 9.00 மணி முதல் 3 மணிவரை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப்பட்டறை ஆசிரியர் பு.கணேசராஜாவினால் நடதத்தப்படவுள்ளது. இதில் ஏனைய பாடசாலை மாணவர்களும் சீருடையுடன் உரிய ஒழுங்குடன் வருகைதர வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



**இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றினை கடந்த சனிக்கிழமை ஞானம்ஸ் விடுதியில் நடத்தியது. இந்நிகழ்வில் பிரதம நிறைவேற்று அதிகாரி இம்ரான் புர்ஹான் விளக்கமளிப்பதையும், கலந்து கொண்ட ஊடகவியலாளர்களையும் காணலாம்.** (54)



# வேலை வாய்ப்புச் செய்திகள்

பிரபல நீர்ப்பாசன, கட்டட ஒப்பந்த நிறுவனம் ஒன்றிற்கு கணக்கு உதவியாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர் தேவை. தொடர்புகளுக்கு: 353/8 G Mannar Road, Veppankulam, Vavuniya. T.P: 077 371 6368

---

பிரபல போன் விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு: யாழ்.போன்செப், இல.10 நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 021 222 3817

---

தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றிற்கு பெண் பணியாளர்கள் தேவை, (மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: Selva Tele Communication, Tembel Road, Jaffna. T.P: 077 728 6050.

---

யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்திற்கு காப்புறுதி ஆலோசகர், தனிப்பட்ட நிதி ஆலோசகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், தனிப்பட்ட நிதி முகாமையாளர் ஆகிய பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை. தொடர்புகளுக்கு: 077 366 8829 (விமலதீஸன்), 077 366 4160 (மாவேந்தன்).

---

நெல்லியடியில் இயங்கும் பார்மசி ஒன்றிற்கு மாலை 6.30 மணி வரை பணியாற்றக்கூடிய பெண் பணியாளர்கள் தேவை. (அனுபவம் மிக்கவர்கள் விரும்பத்தக்கது) தொடர்புகளுக்கு: 077 023 8140, 021 320 1751.

---

ஆயுர் வேத மருத்துவ நிலையம் ஒன்றின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா கிளைகளில் பணியாற்றுவதற்கு Tally கணனி அறிவுள்ளவர்கள் (பெண்) ஆயுர்வேத மூலிகை பற்றி அறிவுள்ளவர்கள் (ஆண்) தேவை. தொடர்புகளுக்கு: 077 361 4926.

---

புறக்கோட்டையில் இயங்கும் பிரபல Electronics இறக்குமதி ஸ்தாபனம் ஒன்றுக்கு Sales Boy தேவை. தொடர்புகளுக்கு: 077 266 6369, 0112 473514.

---

நீர்கொழும்பில் உள்ள டிம்பர் டிப்போ (Timber Depot) வுக்கு பயிற்சி பெற்ற பணியளர்கள் தேவை. தொடர்புகளுக்கு: 072 114 0915.

---

Brown & Company இன் புளியங்குளம் நிலையத்திற்கு முகாமையாளர், உதவியாளர் தேவை. தொடர்புகளுக்கு: 024 222 1145, 077 988 3701.

---

புத்தளத்தில் இயங்கும் இறால் பண்ணை ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை. தொடர்புகளுக்கு: 072 740090, 077 540 0941.

---

சந்தைப்படுத்தல் நிறுவனம் ஒன்றுக்கு நிறுவன கணக்கீடு, விற்பனைக் கணக்கீடு செய்வதற்கு கணனி அறிவுள்ள முன் அனுபவமுள்ள பெண் கணக்காளர் தேவை. தொடர்புகளுக்கு: 021 320 7585, 021 221 3027.

---

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Bio Chem International தனியார் நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள் தேவை. தொடர்புகளுக்கு: 077 039 9883.

---

கடவத்தையில் இயங்கும் Hard Ware ஒன்றிற்கு பணியாளர்கள் தேவை. தொடர்புகளுக்கு: 011 490 0180, 072 550 8073.

---

இரண்டு பேரைக் கொண்ட ஒரு குடும்பத்தில் சமையல் உட்பட வீட்டு வேலைகளை நிறைவேற்றக்கூடிய நற்பண்பு வாய்ந்த பணிப்பெண் உடனடியாகத் தேவை. தொடர்புகளுக்கு: 071 745 4392

# சிறுவர் துஷ்பிரயோகத்தை எதிர்க்க சமூகம் துணிந்து முன்வரவேண்டும்



(கிளிநொச்சி)

நடைபெறும் சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்தும் துணிவு மக்கள் மத்தியில் உருவாக்கப்பட வேண்டுமென ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.உடுவில் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாற்றாற்றல் உடையோர் மற்றும் முதியோர் கௌரவிப்பும் சிறுவர் தின நிகழ்விலும் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், சிறுவர்களை மதிக்க வேண்டுமென்பது சர்வதேச சட்டம் ஆனால் இங்கு சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது எனவே சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுபவர்களை இனம் காட்டுவதற்கும் அவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்கும் எமது சமூகம் துணிந்து முன்வர வேண்டும்.

அரசாங்கம் சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கு சட்டங்களை வகுத்துள்ளபோதும் அதற்காக விசேட அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளபோதும் நடைபெறும் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்தும் துணிவு மக்கள் மத்தியில் உருவாக்கப்படும் வரை இதனை தடுப்பதென்பது சாத்தியமற்றதாகவே அமையும் எனவே அவற்றை வெளிப்படுத்துபவர்களுக்கான பாதுகாப்பை வழங்கவும் சட்டம் முன்வரவேண்டும்.

இதுதொடர்பான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் செயற்பாடுகள் மேலும் வலுப்படுத்தப்படவேண்டும். இவ்விடயத்தில் மக்கள் பூரண விழிப்புணர்வடைகின்ற போதே சிறுவர்துஷ்பிரயோகம் என்பது முற்றாக துடைத்தெறியப்படும். மாற்றாற்றல் உடையோரை பாதுகாப்பதற்கும் அவர்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குமான செயற்பாடுகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றார்.

உடுவில் பிரதேச செயலர் நந்தகோபாலனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வலி. தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களான அரிகரன் தேவராஜா இராஜசேகரம் ஆகியோரும் வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பியின் வலிகாமம் அமைப்பாளருமான சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பரமர் சங்கமம்



'கெடு குடி சொற் கேளாது' என்பது போலவே மாறி மாறி வந்த பெரும்பான்மை அரசுகள் காதில் போட்டுக் கொள்வதில்லை.

அவை கிள்ளிப் போடும் பிச்சையை ஏந்துவதென்றால் நன்றாகப் பிடிச்சவிசயம். தனித்தனியாக இயங்கி வந்த வட தென்பகுதிகளை ஒன்றாக்கிய பிரிட்டிஷார் சுதந்திரம் வழங்கிப் போன பின்னால் சிறுபான்மைத் தமிழர்கள், சிங்களவர்களுக்குக்கிள்ளுக் கீரையாகவே இருந்து வருகின்றனர்.

அதற்கு முன்பாக ஒன்றுமே தெரியாமல் இருந்த பெரும்பான்மை இனத்தை முஸ்லிம் சிங்கள கலவரம் 1915ஆம் ஆண்டில் நடந்த வேளை இந்நாட்டின் உரிமையாளன் நீதான் என்று சுட்டிக்காட்டி உசுப்பேத்தி விட்டதும் இந்தத் தமிழரென்பதும் வரலாறு.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி விடுதலைப் புலிகளை வெற்றி கண்ட யுத்தத்தில் நாற்பதாயிரம் பொது மக்களை கொன்றதற்கும், தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபை குறைந்தது நூறு தடவை இலங்கை அரசுக்குச் சொல்லிப் போட்டுது.

அதுக்கு இன்னும் செவிசாய்ப்பதாக இல்லை. 'கொடாக் கண்டன்' விடாக்கண்டன் நிலைமை தொடர்கிறது. இதுக்கிடேல்ல விடுதலைப் புலிகளின் நெருங்கிய சகாவும் அவர்களுக்கு ஆயுத விநியோகத்தராகவும் திகழ்ந்ததாக சகல ஊடகங்களும் வர்ணித்த குமரன் பத்மநாதனை அவரில் எந்தவிதக் குற்றமும் காணப்படவில்லையென அரசு விடுதலை செய்துள்ளது.

இந்நிலையில் இலங்கையில் இருந்து பெருந்தொகையான மக்கள் அவுஸ்ரேலியா செல்வது பற்றிய கருத்தரங்கொன்றும் சமீபத்தில் அந்நாட்டு டீக்கின் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுள்ளது.

போராசிரியர் டேமியன் கிங்ஸ்பெரி என்பார் 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்பு தமிழர்கள் கல்வி மற்றும் அரச பதவிகளில் புறக்கணிக்கப்பட்டதால் ஆரம்பமான சாத்வீகப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வழி வகுத்தது.

அதனைத் தொடர்ந்த அரச பயங்கரவாதத்தில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்ட பயங்கரத்தால் தமிழர் பிற நாடுகளுக்குத் தப்பிச் செல்லும் நிலைமை ஏற்பட்டது. புலிப்பயங்கர வாதத்தில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றியதெனச் சொன்ன அரச பயங்கரவாதம் தொடர்வதும் மேற்படி கருத்தரங்கில் பேராசிரியர் பேமியன் கிங்ஸ் பெரியால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அது அப்படி இருக்கையில் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டு ஐந்து தொழிலாளர்கள் இருக்கையில் அவர்களிடம் அபகரித்த இழுவைப்படகைப் பயன்படுத்தி அவுஸ்ரேலியாவுக்கு அகதிகள் பயணித்துக் கொண்டிருப்பதாகவும் ஒரு தகவல் கசிந்துள்ளது.

இதெல்லாம் எதனைக் குறிக்கிறது? கெடுகுடி சொற்கேளா தென்னும் நிலையில் இலங்கை அரசு இன்னமும் பிரச்சினையைத் தீர்க்கமால் மேலும், மேலும் பிரச்சினைகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் திரிசங்கு சொர்க்கத்தைத்தானே இல்லையே பின்னை... சொல்லுங்க பாப்பம்...

## குரங்குகள் படையெடுப்பு


(வரணி)

வரணிப் பிரதேசத்தில் தற்போது குரங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். தற்போது பெய்த மழையை அடுத்து குரங்குகள் படையெடுத்து குடிமனைகளுக்குள் நுழைந்து அட்டகாசம் செய்வதாகவும். அண்மையில் கோழிப் பண்ணையில் உள்நுழைந்த குரங்குகள் பயன்தரு மரங்களை சேதப்படுத்தி நாசம் செய்வதாகவும் இதனால் பண்ணை ஊழியர்கள் தாம் உசார் நிலையில் இருக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (150)

## பஸ்தரிப்பிடம் அகற்றம்

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மாம்பழம் சந்தியில் உள்ள கடைத்தொகுதிக்கு அருகாக அமைந்திருந்த பஸ்தரிப்பிடம் முற்றாக இடித்து அகற்றப்பட்டுள்ளது.

இந்த பஸ்தரிப்பிடம் வீதி அகலிப்புப்பணிக்காவே அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை அண்மையில இந்த வீதி காப்பற் இடப்பட்டுள்ள நிலையில் மற்றைய வீதியின் அருகாமையில் குவிக்கப்பட்ட கற்கள் இன்னும் இருப்பதால் பேருந்துக்காக நிற்கும் பயணிகள் சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (23)



துன்னாலை வேம்படிச் சந்தியில் அமைந்துள்ள வீடொன்றில் நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் சோதனையிட்டபோது கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். இதில் கைப்பற்றப்பட்ட கசிப்பு போத்தல்களைக் காணலாம். (18)

## எரிபொருள் முத்திரைகிடைக்குமா?

வடக்கு வரணிப்பிரதேசத்தில் மின்சாரம் அற்ற மற்றும் ஓலைக் குடிசைகளில் வாழும் குடும்பங்களுக்கான மண்ணெண்ணெய் முத்திரை இன்னமும் கிடைக்கவில்லை என்று பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 6 மாதங்களுக்கு மண்ணெண்ணெய் முத்திரை கிடைத்ததாகவும் அதற்குரிய புள்ளிகளுக்கு ஏற்கனவே மண்ணெண்ணெ வழங்கப்பட்டு விட்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது சுமார் இரண்டு மாதங்களாகியும் தமக்கு இன்னமும் முத்திரைகள் கிடைக்கவில்லை எனக்கூறும் பயனாளிகள் தமக்குரிய முத்திரை கிடைக்குமா என எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவிக்கின்றனர். (150)

## முரசின் இன்றைய பலன்

(05.11.2012 - திங்கட்கிழமை)

நந்தன வருஷம் ஐப்பசி மாதம் 20 ஆம் திகதி. நட்சத்திரம் புனர்பூசம் அமிர்த யோகம். பிற்பகல் 5.15 வரை. திதி: சஷ்டி பிற்பகல் 12.43 வரை.
இராகுகாலம் 7.35 - 9.05 வரை. சுபநேரம் 12.05 - 1.35 வரை
எமகண்டம் 10.35 - 12.05 வரை, குளிகன் காலம் 1.35 - 3.05 வரை.
-கரிநாள். கேதாரகௌரி விரதம் 13ஆம் நாள்-

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனதில் குழப்பம். குடும்ப ஆதரவு ஊக்கம் தரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். முக்கிய செலவு இருக்கும். பாதுகாப்பு கவனம். ஆபத்து வந்து விலகும். பயண வாய்ப்பு. |
| ரிஷபம் | சிலரால் தர்மசங்கடம். பொறுமை உங்களைக் காக்கும். நட்பில் நெருடல் வரலாம். வளர்ச்சிக்கு அதிக உழைப்பு. சராசரி பணவரவு. சேமிப்பு பயன்படும். வாக்குறுதிகள் வேண்டாம். |
| மிதுனம் | எல்லாம் நன்மையாகவே இருக்கும். மாறுபட்டவர்களும் அன்பு பாராட்டுவர். தொழில், இடையூறு விலகும். அதிக பணவரவு. உடல்நலம் பலம் பெறும். விருந்துண்டு மகிழ்வீர்கள். |
| கடகம் | மனதில் உற்சாகமும், செயல்களில் திறமையும் பரிமளிக்கும். வேலைகள் எளிதில் முடியும். கூடுதல் மூலதனம் செய்வீர்கள். ஆதாயம். நினைத்த பொருள் வாங்குவீர்கள். வெற்றி. |
| சிம்மம் | உயர்வு, தாழ்வு கருதாமல் பழகுவீர்கள். செயல்களில் வெற்றி. கடினமாக உழைப்பு. உபரிவருமானம். குடும்பத்தேவை நிறைவேறும். உறவினர் வருகையால் நன்மை. இனிய கனவு. |
| கன்னி | உறவினர் எதிர்பார்ப்புடன் அணுகுவர். உதவி செய்வீர்கள். தொழிலில் மாற்றங்கள். அளவான பணவரவு. இல்லறத்துணை ஆதரவு. உணவில் கவனம். பிள்ளைகளால் கௌரவம். |
| துலாம் | பழைய நட்பு சந்திப்பு. நெருக்கடியான சூழ்நிலைகளை சமாளிப்பீர்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும். தாராள பணவரவு. நட்புக்கு மரியாதை. சுபநிகழ்ச்சி திட்டம். |
| விருச்சிகம் | புதுமையான எண்ணங்கள். எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். தொழில், திட்டமிட்ட வளர்ச்சி. சராசரி பணவரவு. விருந்து, உபசரிப்புகள். சலுகைகளும் சன்மானமும். ஜெயம். |
| தனுசு | புதிய பணிகள் வரும். தொழில், நடைமுறை மாற்றம். பணவரவு தாராளம். நினைத்தது நடக்கும். தாய் வழியில் நம்பிக்கை. உறவும் நட்பும் போட்டியிட்டு உதவி. வெளியூர் நற்செய்தி. |
| மகரம் | பேச்சிலும் செயலிலும் சாந்தம். வேலைகள் இலகுவாகும், புதிய பரிமாணம் ஏற்படும். கூடுதல் பணவரவு. அறப்பணி செய்வீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி. சுற்றுலா திட்டம். |
| கும்பம் | வெளிவட்டார தொடர்புகள் தொந்தரவு. வேலைச்சுமை. புதிய வாய்ப்புகளும் அதிக வருமானமும் வரும். உடல் பலம் பெறும். போக்குவரத்தில் கவனம். குடும்பத்தில் மகிழ்ச்சி. |
| மீனம் | எதிர்பார்ப்பு நிறைவேற தடங்கல். குடும்பத்தினருடன் விரக்தி. வேலையிலும் குளறுபடி. பேச்சு குறைப்பதும் பொறுமையும் காக்கும். கடன் நேரும். போட்டி இருக்கும். அரசால் நன்மை. |

(06) ஒழுங்கற்றிருக்கும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.
1. பணத்தை / கண்மூடித்தனமாக / செய்யாதே / செலவு / வீணே
..........................................................................................

2. அவதானிக்கும் / அவன் / ஒரே / நூறு / நேரத்தில் / விடயங்களை / உடையவன் / ஆற்றல்
..........................................................................................

(07) கீழ்வரும் மரபுத் தொடர்களின் உட்கருத்தை எழுதுக.
1. தலைக்கனம் : ..................................................
2. காது கொடுத்தல் : ..................................................

(08) பின்வரும் தனிவாக்கியங்களை தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.
1. மயூரன் நன்றாகப் பாடல் பாடுவான்
2. கண்ணன் நன்றாகப் பாடல் பாடுவான்
..........................................................................................

(09) வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.
1. மே மாதம் 1 ஆம் திகதி .................................................. தினம்
(தொளிலாழிகள் / தொலிளாழிகள் / தொழிலாளிகள்)

2. மக்கள் கள்வனை .................................................. காட்டினர்
(அடயாளம் / அடையாளம் / அடையாலம்)

(10) ஒவ்வொரு தமிழ்ச் சொற்களுக்குமான பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
1. பென்சில் .................................... 3. அலுவலகம் ....................................
2. பலூன் ....................................

(11) பின்வரும் வசனங்களுக்குரிய கருத்தினைத் தமிழில் எழுதுக.
1. can I help you? ..................................................
2. please give me a book ..................................................
3. I want to rest ..................................................
4. what are you doing? ..................................................

(12) பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் தமிழ்க் கருத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
1. .................................................. ஒபட ஒன மொனவத?
2. .................................................. மட்ட தே ஓண?
3. ..................................................மகே பொத்த கொயித?

(13) பின்வரும் தமிழ்ச் சொற்களை சிங்களத்தில் எழுதுக.
1. சொல்லுங்கள் : ..................................................
2. உங்கள் பெயர் என்ன? : ..................................................
3. சாப்பிட்டீங்களா? : ..................................................

(14) பின்வரும் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
01. பின்வரும் விதைகளில் எவ்விதை சிறியது?
1. பலாவிதை 2. மிளகு 3. ஆலம்விதை

02. இலங்கையின் தேசிய மரம்.
1. நாகமரம் 2. நாவல்மரம் 3. வேப்பமரம்



தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013
# கல்வி முரசு
வெளியீடு 09



(01) பின்வரும் விவரணத்தை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நான் ஒரு மின்னணுச் சாதனம், மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்டவன். நான் நானாக இயங்காது, பிறர் கட்டளைகளுக்கேற்பவே செயற்படுவேன். நான் எவரையும் ஏமாற்றுவதில்லை. ஏளனமாகச் சிரிப்பதில்லை. எனக்குப் பேராசை கிடையாது. எனது பணிகளை நிறைவாகச் செய்வேன். நேரத்தை வீண் விரயமாக்கமாட்டேன். நான் இன்று கல்வி, வணிகம், வங்கி போன்ற பல துறைகளில் முக்கிய பங்காற்றுகின்றேன். நான் உங்களுக்கு சிறந்த ஆசிரியன். பிறருடைய வேகத்திற்கு தகுந்தபடி மெதுவாகவும், துரிதமாகவும் கற்றுக் கொள்ள வழிகாட்டுவேன்.

1. பணிகளை நிறைவாகச் செய்வேன் என்ற வாக்கியத்தின் எழுவாய் எது?
..........................................................................................
2. இங்கு 'விரயமாக்குதல்' என்ற சொல்லின் பொருள் யாது?
..........................................................................................
3. 'நிறைவு' என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக.
..........................................................................................
4. 'கட்டளை' என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.
..........................................................................................
5. 'பங்காற்றுகின்றேன்' என்பதை இறந்த காலத்தில் எழுதுக.
..........................................................................................
6. 'ஆசிரியன்' என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக.
..........................................................................................
7. தன்மை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக.
..........................................................................................
8. 'ஏமாற்றுவதில்லை' என்பதைப் பிரித்து எழுதுக.
..........................................................................................
9. 'சிரிப்பதில்லை' என்பதன் உடன்பாட்டு வடிவம் யாது?
..........................................................................................
10. மின்னணுச்சாதனம் பங்காற்றும் முக்கிய துறையினை எழுதுக.
..........................................................................................

(02) **இப்பாடலைப் படித்து இது தொடர்பாகக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

காலை மாலை எப்பொழுதும்
கடவுளின் நினைவே கொண்டவராம்
வேலை இன்றிச் சிறுபொழுதும்
வீணாய்ப் போக்க மாட்டாராம்

சத்தியம் பேசுதல் அவர் கொள்கை
தருமம் காத்தல் அவர் கொள்கை
இத்தல மக்கள் யாவர்க்கும்
இன்ப சுதந்திரம் அவர் கொள்கை

கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கருதி வாழ்ந்தார் நம் தாத்தா
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழிகாட்டுவார் நம் தாத்தா

(i) இப்பாடலில் நம் தாத்தா யார்? (..............................)

(ii) 'சத்தியம்' என்ற சொல்லின் கருத்து யாது? (..............................)

(iii) 'மண்ணில்' என்பதை பன்மையில் எழுதுக. (..............................)

(iv) 'மக்கள்' என்பதற்கு ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. (..............................)

(v) 'தாத்தா' என்பதன் எதிர்ப்பாற்சொல் யாது? (..............................)

(vi) உயர்திணை ஒருமை இறந்தகால வினைச்சொல் எழுதுக. (..............................)

(vii) 'தர்மம்' என்பதன் எதிர்ச்சொல் யாது? (..............................)

(viii) 'வழிகாட்டுவார்' என்ற சொல் எக்காலத்துக்குரியது? (..............................)

(ix) இப்பாடலிலுள்ள இணை மொழியினை எழுதுக. (..............................)

(x) மேலுள்ள பாடலில் குறிப்பிட்டுள்ள நற்பழக்க வழக்கம் ஒன்றினை எழுதுக.
(..............................)

(03) **சுருக்கமான விடை தருக.**

1. 5 மீற்றர் 0.25 சென்ரி மீற்றரை மீற்றரில் தருக. ..............................
2. 0.978 ஐ விஞ்ஞான முறைக் குறியீட்டில் எழுதுக. ..............................
3. 3, 9, 27, .................... அடுத்து வரும் எண் யாது?
4. 1 1/5, 1/5, 2 1/5, .................... எனும் தொடரை இறங்குவரிசையில் எழுதுக. ..............................
5. 0.1 + 0.25 + 0.0001 தரப்பட்டவற்றைக் கூட்டி எழுதுக. ..............................
6. ..............,9500,.............. முன்னுள்ள பின்னுள்ள எண்களை எழுதுக.
7. இரண்டு கிலோ சீனியின் விலை 98.00 அப்பிள் ஒன்றின் விலை 15.00 எனின், 5500 கிராம் சீனியினதும் 12 அப்பிள்களினதும் மொத்தப் பெறுமதி யாது? ..............................
8. 37 ஐ உரோம எண்ணில் எழுதுக. ..............................
9. ஒரு தேசிய பாடசாலையின் வகுப்பு ஒன்றிலுள்ள மாணவர்களின் சராசரி எண்ணிக்கை 125 எனின் அப்பாடசாலையின் தரம் - 1 முதல் தரம் -13 வரையுள்ள வகுப்புக்களில் உள்ள மாணவர்களின் மொத்த மாணவர் தொகை யாது? ..............................
10. 8043 ஐ எண்சட்டத்தில் காட்டுக. ..............................

(04) பாலன், குமார், விமலன் ஆகிய நண்பர்கள் மூவரும் விறகு வெட்ட காட்டுக்குச் சென்றனர். அவர்கள் விறகு வெட்டும் போது உறுமல் சத்தம் கேட்டது. அதன்பின் நடந்த சம்பவத்தை பயனிலைகளுடன் ஆறு வசனங்கள் எழுதுக. ஒரு வசனம் நான்கு சொற்களைக் கொண்டிருக்க வேண்டும்


..............................
..............................
..............................
..............................
..............................
..............................

(05) **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அது தொடர்பாக கேட்கப்பட்டுள்ள வினாக்களிற்கு விடை தருக.**

பூசாவின் பால் போன்ற வெண்ணிற மேனியிலே கரிய புள்ளிகள் உள்ளன. அது 'மொழு மொழு' உருண்டு, திரண்டு கொழுத்திருந்தது. கரிய மணி போன்ற கண்கள் சிவந்த சின்னஞ்சிறிய வாய் நிமிர்ந்து நின்று அசையும் சின்னக் காதுகள், பட்டுப் போன்ற மிக மிருதுவான உடல் ஆகியவை என்னைக் கவர்ந்தன. நான் "பூசா" என்று கூப்பிட்டால் அது உடனே ஓடிவரும். சிலசமயம் என் மடிமேலே சுருண்டு படுத்துவிடும். நாயைக் கண்டவுடன் அது பாய்ந்தோடி வந்து என்னிடம் தஞ்சம் புகும். உடனே அதனைத் தூக்கி அணைத்துக் கொள்ளல் வேண்டும். அன்றேல் அது என்னை அசையவிடாது. இரவில் எனது அருகில் அது படுத்து உறங்கும். அன்போடு பூசாவை அணைத்துக் கொண்டு துயில்வேன்.

1. பந்தியில் "பூசா" என்று குறிப்பிடப்படுவது எதுவாக இருக்கும்?
..............................
2. தஞ்சம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.
..............................
3. சின்னஞ்சிறிய என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லினை எழுதுக.
..............................
4. பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்கு இடுக்குத் தொடர் ஒன்றைத் தருக.
..............................
5. பந்தியில் வந்துள்ள இரட்டைக்கிளவி ஒன்றைத் தருக.
..............................
6. பந்தியில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடர் ஒன்றை எழுதுக.
..............................
7. பந்தியில் இடம்பெற்றுள்ள அஃறிணை ஒருமை இறந்தகால வினைச்சொல் ஒன்றை எழுதுக.
..............................
8. பின்வரும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள அடைமொழிச் சொல்லின் கீழ் கீறிடுக.
"நிமிர்ந்து நின்று அசையும் சின்னக் காதுகள்"
..............................
9. மிருதுவான என்பதன் கருத்து யாது?
..............................
10. 'அன்போடு பூசாவை அணைத்துக் கொண்டு துயில்வேன்' இவ்வாக்கியத்தில் வரும் பயனிலைச் சொல் யாது?
..............................

# கூடங்குளம் விவகாரம்; சர்வதேச ஆதரவு திரும்புகிறதா?



கூடங்குளம் அணு உலை விவகாரத்தில் மத்திய அரசும் மாநில அரசும் எதிர்ப்புகளை பொருட்படுத்தாமல் தீவிரமாக இருக்கும் சூழலில் அணு உலை எதிர்ப்பாளர்களுக்கு சர்வதேச அறிவு ஜீவிகள் மத்தியில் ஆதரவு குவிந்து வருகிறது.

சர்வதேச கல்வியாளரும் அரசியல் விமர்சகருமான அமெரிக்காவை சார்ந்த நோம் சோம்ஸ்கி கூடங்குள அணு உலையை எதிர்த்துப் போராடும் மக்களுக்கு அனுப்பியுள்ள மடலில் கூடங்குளம் என்பது காத்திருப்பில் உள்ள போபால் பேரழிவு என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அம்மடலில் அணு சக்தி என்பது ஆபத்தான முன்னுதாரணம் என்றும் போபால் போன்ற தொழிற்சாலை பேரழிவுகள் நடந்துள்ள நாடான இந்தியாவில் மேலும் ஆபத்தானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.




தம் வாழ்வை பணயம் வைத்து அணு உலை-யை எதிர்த்து போராடும் கூடங்குளம் மக்கள் போற்றுதலுக்குரியவர்கள் என்று 1976 இல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மைரேட் மகுயிர் பாராட்டியுள்ளார். கேரள முன்னாள் முதல்வர் அச்சுதானந்தனும் அணு குண்டு தேவையில்லை என்று கூறியுள்ளார்.

டென்மார்க்கின் சிவப்பு-பச்சை கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கிறிஸ்டியன் ஜுஹ்லும் கூடங்குள மக்களுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இலங்கை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ஜெயசூரியா "கூடங்குளம் அணு உலை என்பது இன்னொரு புகுஷிமாவை உருவாக்குவதாகும். தமிழர்கள், சிங்களர்கள், இந்தியர்கள் மேல் நடத்தப்படும் கூட்டு இன சுத்திகரிப்பு" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"அணு மின் திட்டத்தை நிறுத்த மக்கள் இன்னும் அழுத்தம் கொடுக்க வேண்டும்" என்று கூறியுள்ள அயர்லாந்து சோசலிச கட்சியின் உறுப்பினர் பவுல் முர்பி, "பேராசை பிடித்த அணு உலை லாபியை குறித்து ஐரோப்பா முழுதும் பிரசாரம் செய்வேன்" என்றும் கூறியுள்ளார்.

மேலும் ஜெர்மனியின் சோசலிச மாற்று கட்சியின் செய்தி தொடர்பாளர் லூஸி ரெட்லர், இந்திய பாரம்பரிய நடன கலைஞரும் சமூக சேவகருமான மல்லிகா சாராபாய், மருத்துவர் பினாயக் சென், எழுத்தாளர் அருந்ததி ராய், அணு விஞ்ஞானி பரமேஸ்வரன் உள்ளிட்டோர் கூடங்குள மக்களுக்கு ஆதரவுதெரிவித்துள்ளனர்.

# ஆடம்பர திருமண விழா ஆந்திர அமைச்சர் சர்ச்சையில்




அரசு இயந்திரத்தை தவறாகப் பயன்படுத்தி, கோடிக் கணக்கான பணத்தைச் செலவழித்து, ஆந்திர மாநில போக்குவரத்து அமைச்சர், பொஸ்தா சத்யநாராயணா மகளுக்கு நடத்தப்பட்ட ஆடம்பர திருமணம், பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திருமணத்தில், மணமக்கள் அமரும் மேடைக்காக மட்டுமே, ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல், அனைவரையும், ஆச்சரியத்தில் வாய் பிளக்க வைத்துள்ளது.

இவர்களுக்காக, விசாகபட்டினத்தில் உள்ள, அனைத்து நட்சத்திர ஓட்டல்களும் முன் கூட்டியே ஒதுக்கப்பட்டிருந்தன வி.ஐ.பி.க்களை, திருமணம் நடக்கும் இடத்துக்கு வரவழைப்பதற்காக, நூற்றுக்கணக்கான சொகுசு கார்கள் பயன்படுத்தப்பட்டன. திருமண விழாவில், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் இருப்பதற்காக, 700 பொலிஸார், குவிக்கப்பட்டிருந்தனர். மணமக்கள் அமரும் மேடை மற்றும் பந்தல் ஆகியன வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட, பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மாநிலம் முழுவதும், 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு, திருமண அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. திருமண விருந்தாக, அறுசுவை உணவு பரிமாறப்பட்டது.

தெலுங்கு தேசம் கட்சியின் மூத்த தலைவர் ஸ்ரீகாந்த் ரெட்டி கூறியதாவது:அமைச்சர் மகளின் திருமணத்துக்காக, ஒட்டு மொத்த அரசு இயந்திரமும் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அரசு நிதி இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. இதுகுறித்து விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். சத்யநாராயணாவை, அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கூறினார்.

# சின்மயிக்கு மிரட்டல் இராதா மணாளன் கைது



பாடகி சின்மயிக்கு டிவிட்டரில் மிரட்டல் விடுத்த வழக்கில், கம்ப்யூட்டர் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டன. சினிமா பின்னணி பாடகி சின்மயி. இவருக்கு டிவிட்டர் மூலம் இவருக்கு நட்பு வட்டம் உள்ளது. திருப்பூர் கலெக்டர் அலுவலக, இளநிலை உதவியாளர் ராதா மணாளன் என்பவருடன் நட்பு ஏற்பட்டது. அண்மையில், இலங்கையில் நடந்த கலை நிகழ்ச்சியில் சின்மயி பங்கேற்றார்.

தீவிர தமிழ் மொழி மற்றும் இனப்பற்றும் கொண்ட ராதா மணாளனும், நண்பர்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து டிவிட்டரில் கருத்து வெளியிட்டனர். இக்கருத்து மோதலில், தன்னை ஆபாசமாக சித்தரித்து, மிரட்டல் விடுத்ததாக, சென்னை சைபர் கிரைம் பொலிஸில் சின்மயி புகார் செய்தார். ராதா மணாளனை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் விசாரணை நடந்து வருகிறது.

இந்த நிலையில் அவிநாசி வந்த பொலிஸார், கைகாட்டிபுதூர், கமிட்டியார் காலனியில் உள்ள ராதா மணாளன் வீட்டை சோதனையிட்டனர். அவர் பயன்படுத்திய கம்ப்யூட்டர், லேப்-டாப், சிடிக்கள் உள்ளிட்ட ஆவணங்களைப் பறிமுதல் செய்தனர். வழக்கு விசாரணைக்காக, அவை சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

# வரம்புமீறிச் செல்கிறது காங்கிரஸ் சுப்பிரமணிய சுவாமி போர்க் கொடி



அசோசியேட்டட் ஜர்னல் நிறுவனத்திற்கு ரூபா90 கோடி கடன் அளித்ததற்காக காங்கிரஸ் கட்சியின் அங்கீகாரத்தை இரத்து செய்யக் கோரி ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி, தேர்தல் ஆணையத்திடம் மனு அளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர்,தேர்தல் ஆணையத்திடம் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

"நேஷனல் ஹெரால்டு" நாளிதழை வெளியிட்டு வந்த "அசோசியேட்டட் ஜர்னல்ஸ்" நிறுவனத்தை காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும், அவரது மகன் ராகுல் காந்தியும் வாங்கின ந நிறுவனத்துக்கு காங்கிரஸ் கட்சி ரூபா 90 கோடிக்கு மல் கடன் வழங்கியுள்ளது.

இதை அக்கட்சியின் மூத்த தலைவரும் செய்தித் தொடர்பாளருமான ஜனார்தன் துவிவேதியே தனது நவம்பர் 2 ஆம் திகதியிட்ட அறிக்கையில் ஒப்புக் கொண்டுள்ளார். எந்தவிதமான உத்தரவாதமும் தராமல் "அசோசியேட்டட் ஜர்னல்ஸ்" நிறுவனம் இந்தக் கடனை, காங்கிரஸ் கட்சியிடம் இருந்து பெற்றுள்ளது. இது, வருமான வரிச்சட்ட,த்தின்படி சட்டவிரோதமான செயலாகும். ஏனெனில், ஓர் அரசியல் கட்சி வணிக நோக்கங்களுக்காக கடன் அளிக்கக் கூடாது.

எனவே, சட்டங்களையும், அரசியல் கட்சிகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் மீறியதற்காக காங்கிரஸ் கட்சியின் அங்கீகாரத்தை இரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

## பிரபாகரன்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

விடுதலைப்புலி ஒருவர் பொலீஸாரால் பிடிபடுவதற்கான சூழல் ஏற்பட்டால் உடனடியாக குப்பி கடித்து சாகவேண்டும் என்பது அவர்கள் இயக்கத்தின் ஆணை. சிவராசனை கர்நாடகாவில் சுற்றிவளைத்தபோது தேசிய பாதுகாப்பு படையை அனுப்பி அதிரடியாகப் பிடித்திருக்கவேண்டும். அதைவிடுத்து, டெல்லியில் இருந்து சிறப்புப் படைகள் வந்துகொண்டிருக்கின்றன என்று சொல்லி ஒருநாளுக்கு மேல் தாமதம் செய்ததுதான் சிவராசன் தற்கொலை செய்துகொள்ள வாய்ப்பு கொடுத்தது. அதைவிடக் கொடுமை, அவர் வசம் இருந்த ஆவணங்களை எல்லாம் அழிப்பதற்குத் தேவையான கால அவகாசம் கொடுக்கப்பட்டதுதான். அதிரடியாகச் செயல்பட்டிருந்தால் சிவராசனை உயிரோடு பிடிக்க முடியவில்லை என்றாலும் ஆதாரங்களைக் கைப்பற்றியிருக்கலாம்.

**கேள்வி: உளவுத்துறைத் தலைவர் முதல் கலைஞர் வரை, மரகதம் சந்திரசேகர் முதல் வைகோ வரை இந்நூலில் ஏராள மானவர்கள் மீது நீங்கள் கடுமையாகக் குற்றம்சாட்டுகிறீர்கள். இதன் எதிர்வினைகள் எப்படி இருக்கும்?**

அரசியல்வாதிகளோ, மற்றவர்களோ எப்படி பார்க்கிறார்கள் என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. யாரையும் குற்றம் சாட்டவேண்டும், நடவடிக்கை எடுக்கச் செய்யவேண்டும் என்ற எண்ணம் எல்லாம் இல்லை. சாட்சி இருந்தால் எவரையும் விடக்கூடாது. இல்லையென்றால் ஒருவரையும் தண்டிக்கக்கூடாது. இதுதான் என்னுடைய எண்ணம்.

# சாதனை படைக்க போராடிய இளைஞன்





மூணாறில் "கின்னஸ்" சாதனைக்காக கராத்தே வீரர் ஒருவர் இரும்புக் கம்பிகளை கையால் உடைத்தார். மூணாறை சேர்ந்தவர் ஜோசப், 42. கராத்தே, களரி, யோகா, பாக்சிங் உட்பட பல்வேறு தற்காப்பு கலைகளை பயின்றவர். இதில் ஏதேனும் சாதிக்க வேண்டும், என எண்ணிய ஜோசப், கையால் இரும்புக் கம்பிகளை உடைத்து "கின்னஸ்" புத்தகத்தில் இடம் பெற விரும்பினார். 50 கிலோ எடை பிரிவில் 49 கிலோ எடை கொண்ட ஜோசப், 17 மி.மீ. சுற்றளவு கொண்ட இரும்புக் கம்பியை கையால் அடித்து முறிக்க முன் வந்தார்.

நேற்று முன்தினம் பழைய மூணாறில் உள்ள விளையாட்டு பயிற்சி மைய அரங்கில், நோர்வே நாட்டைச் சேர்ந்த கின்னஸ் சாதனையாளர் தியோடர்ஜகான்ஸ், இவரது நண்பர் எரிக் ம்ற்றும் தேவிகுளம் முன்சீப் கோர்ட் நீதிபதி நிசாம்,மூணாறு உதவி டி.எஸ்.பி. சஜி உட்பட 18 பேர் கொண்ட நடுவர் குழு முன்னிலையில், ஜோசப் கைக-ளால் ஒன்றன் பின் ஒன்றாக இரண்டு கம்பிகளை உடைத்தார். இவர் உடைக்க முன் வந்த கம்பிகளை ,மூணாறு இன்ஜினியரிங் கல்லூரி தொழில் நுட்ப பேராசிரியர்கள் ஆய்வு நடத்தியபோது,ஒவ்வொரு கம்பியும் 17.9 மி.மீ.,சுற்றளவைக் கொண்டதாக இருந்தது.இதனால் ஒன்றன் பின் ஒன்றாக 10 கம்பிகளை உடைக்க திட்டமிட்டிருந்த ஜோசப்பால்,இரண்டு கம்பிகளை மட்டும் உடைக்க முடிந்தது.

இவரின் சாதனைக்கான ஆவணங்கள் கின்னஸ் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட உள்ளது.அதன்பின் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்.

# ஜனநாயக வறுமையில் சீனா; மக்கள் தினசரி போர்க்கொடி



சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய 18-வது தேசிய கூட்டம் நடைபெறவுள்ளது. சீனா அரசில் சீர்திருத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், மக்கள் எதிர்பார்க்கும் ஜனநாயகம் அங்கு ஏற்படவில்லை என்று மக்கள் தினசரி பத்திரிக்கை ஒன்று கூறியுள்ளது. இதுகுறித்து அந்தப் பத்திரிக்கை கூறியிருப்பதாவது:-

"ஜனநாயகம்" அரசின் கொள்கையாக மட்டுமில்லாமல், மக்களின் தேவைகளை சந்திக்கிற ஒரு வாழ்க்கை முறையாக இருக்க வேண்டும். ஒப்புக்கொண்டபடி, ஒன்றை தெரிந்துகொள்ளுவதற்கான உரிமை, கலந்துகொள்ள மற்றும் சட்டப்படி நடக்க உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு இங்கு அதிகரித்துள்ளது. ஆனால் மக்கள் எதிர்பார்த்தபடி ஜனநாயகம் இங்கு நடக்கவில்லை.

எப்படியோ நாடு ஜனநாயகப் பாதையில் செல்வதற்கான நிலையான முயற்சியை சீனா எடுத்து வருகிறது. இருந்தும் மக்கள் விரும்பியபடியான ஜனநாயகம் இங்கு இருக்க வேண்டும். மேற்கத்திய ஜனநாயகமுறை இங்கு குழப்பத்தை ஏற்படுத்தும். நாட்டின் சூழ்நிலைக்கேற்றவாறு ஜனநாயகம் இருக்கவேண்டும். சீனாவின் சூழ்நிலைகள் மற்றும் கலாசாரத்திற்கு ஏற்ற பொருத்தமான சீனா பாணியிலான ஜனநாயகம் இருக்கிறது

இந்தநிலையில் நாட்டை நவீன உலகிற்கு ஏற்றவாறு சிறப்பாக மாற்றியமைக்க வேண்டும் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

# பத்திரிகைகள் மூலம் நோய்கள் பரவுமா?



மருத்துவமனைகளில், வரவேற்பறைகளில் கிடக்கும், பழைய பத்திரிகைகளின் மூலம் தொற்று நோய் பரவும், என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். தனியார் மருத்துவமனைகளில், வைத்தியரை பார்க்கக் காத்திருக்கும் நேரத்தை சமாளிக்க, வரவேற்பு அறைகளில், பழைய பத்திரிகைகளை வைத்திருப்பார்கள். நோயளிகள் பலர் இதைத் தொட்டு, படிப்பதால், பலருக்கு நோய் தொற்றும் அபாயம் உள்ளதாக பிரிட்டனின், தேசிய சுகாதார மைய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

பிரிட்டனின், டோர்செட் மாவட்டத்தில், லைம்ரெஜிஸ் பகுதியில் உள்ள, பல் மருத்துவமனையில் 2004ம் ஆண்டு வெளிவந்த பத்திரிகைகள், நோயாளிகள் படிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. இதுபோன்ற பழைய பத்திரிகைகளின் மூலம் பறவைக் காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் போன்றவை பரவக்கூடும். எனவே, ஒரு வாரத்திற்குட்பட்ட பத்திரிகைகளை மட்டும் வரவேற்பறையில் வைக்கும் படி, பிரிட்டன் சுகாதார மையம், இந்த மருத்துவமனைக்கு அறிவித்தல் அனுப்பியுள்ளது."பழைய பத்திரிகைகள் மூலம் நோய் தொற்றும் என்பதை நான் நம்பவில்லை" என, 30 ஆண்டுகளாக மருத்துவமனை நடத்தி வரும் வைத்தியர் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவில் இன்னும் சில தினங்களில் அதிபர் மற்றும் துணை அதிபர் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், நிவேடா மாகாணத்தின் ரெனோ நகரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தனது மனைவியுடன் கலந்து கொண்ட குடியரசுக் கட்சி துணை அதிபர் வேட்பாளர் பால் ரையான்.

# உலக மக்கள் அதிகம் விரும்புவது புலிகளை மட்டும் தான்

## விலங்கு விருப்பு வாக்கெடுப்பில் முடிவு



உலகின் மிகவும் பிடித்த விலங்காக, 73 நாட்டு மக்கள் இணைந்து, புலியை தேர்ந்தெடுத்தனர். உலகம் முழுவதும் இந்திய இனம், இந்தோசீன இனம், சுபத்திரன் இனம், சைபீரியஸ் இனம், பாலி இனம், ஹாஸ்பின் இனம், ஜவான் இனம் என்ற, எட்டு வகையான புலி இனங்கள் இருந்தன.

ஆனால், 1940ல் பாலி இன்மும், ஹாஸ்பின் இனமும், 1970ல், ஜவான் இனமும் முற்றிலும் அழிந்தது. உலகில் உள்ள நான்கு வகையான புலி இனங்களில், ராயல் பெங்கால் வகை புலிகள் மட்டும் இந்தியாவில் உள்ளது.

கடந்த, 2006ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இந்தியா முழுவதும் புலிகளின் எண்ணிக்கை, 1,411 ஆக குறைந்ததால், "புராஜெக்ட் டைகர்" திட்டத்தை மத்திய அரசு முடுக்கிவிட்டது. தற்போது, இந்தியா முழுவதும் உள்ள, 1,706 புலிகளில், தமிழகத்தில் மட்டும், 292 புலிகள் உள்ளன. உலக அளவில், 60 சதவீத புலிகள் இந்தியாவில் உள்ளதால், புலி எண்ணிக்கையில் இந்தியா தொடர்ந்து, முதலிடத்தில் உள்ளது.

உலகில் வேகமாக அழிந்து வரும் விலங்கில், முதல் இடத்தை நோக்கி, புலி இனங்கள் வேகமாக முன்னேறி வருகிறது. புலிகளைக் காக்க, உலகம் முழுவதும் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் உள்ள சமூக அமைப்புகளும், வன ஆர்வலர்களும், புலிகளைக் காக்க, விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

ஆண்டுதோறும், பல்வேறு நாட்டு மக்களிடம் வாக்குகள் சேகரித்து, உலகின் பிடித்தவிலங்கினை, விலங்குகள் நடத்தை ஆய்வாளர்கள் தேர்வு செய்வர். இந்த ஆண்டு, உலகின் பிடித்த விலங்காக புலி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

புலி இனங்கள் அழிந்து வரும் வேளையில், பிடித்த விலங்காக புலி தேர்வு செய்யப்பட்டுள்ளது, வனத்துறையினர் மத்தியில் சற்று ஆறுதலைத் தந்துள்ளது.

உலகின் பிடித்த விலங்கினைத் தேர்வு செய்ய, விலங்கியல் நடத்தை ஆய்வாளர் கேண்டி டிசா என்பவர் வாக்கு சேகரித்தார். இதில், இந்தியா, அமெரிக்கா, ஜப்பன், சீனா உள்பட, 73 நாடுகளை சேர்ந்த, 50 ஆயிரம் பேர் வாக்களித்தனர்.

வாக்கு சேகரிப்பில், 21 சதவீதம் பேரின் ஆதரவோடு, உலகின் மிகப் பிடித்த விலங்காக புலிகள் தேர்வு செய்யப்பட்டது. 20 சதவீத ஆதரவோடு, நாய் இரண்டாம் இடத்தையும், 13 சதவீத ஆதரவோடு டால்பின்கள், மூன்றாம் இடத்தையும் பிடித்தன. பத்து சத வீதம் பேர் குதிரைக்கும், ஒன்பது சதவீதம் பேர், சிங்கத்துக்கும், எட்டு சதவீதம் பேர், பாம்புக்கும் வாக்களித்தனர். யானை, சிம்பென்ஸி, திமிங்கிலம் ஆகியன குறைவான வாக்குகளே பெற்றன.

# காதலிக்கு நட்டஈடு



சிம்பாப்வே நாட்டின் பிரதமராக மோர்கன் சுவான்கிரை பதவி வகிக்கிறார். இவர் லொகார் டியா கரி மாட்டுசன்கா என்ற பெண்ணைக் காதலித்தார். அவரை கடந்த ஆண்டு அதிகார பூர்வமற்ற முறையில் திருமணம் செய்தார். இந்த நிலையில், அவர் மற்றொரு பெண்ணைக் கடந்த செப்ரெம்பரில் முறைப்படி திருமணம் செய்தார்.

இதை அறிந்த அவரது காதலி நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் பிரதமர் மோர்கன் காதலியை கழற்றி விட அவருக்கு 2 இலட்சம் டொலர் நஷ்டஈடு வழங்க உத்தரவிட்டது. அதை மோர்கன் ஒப்புக் கொண்டார்.

# சிரிய விமானத்தளம் புரட்சிப்படை வசம்



சிரியாவில் அதிபர் ஆசாத் படைக்கும் புரட்சிப்படைக்கும் இடையே உள் நாட்டுப் போர் கடுமையாக நடந்து வருகிறது. சிரியாவின் தலை நகர் டமாஸ்கசுக்கும் வர்த்தக நகரம் அலெப்போவிற்கு இடையே உள்ள முக்கிய விமானதளமான டாப்டனாசை புரட்சிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இது குறித்த விடியோ காட்சிகளையும் இணைய தளத்தில் அவர்கள் வெளியிட்டுள்ளனர். இந்தச் சண்டையில் இராணுவத்தினர் பலரைக் கொன்றுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. கதார் நாட்டில் எதிரத் தரப்பு புரட்சிக்குழுக்களின் சந்திப்பு நடைபெறவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே இராணுவம் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ள கோலன் ஹைட்ஸ் பகுதிகளுக்கு சிரியா மூன்று இராணுவ டாங்கிகளை அனுப்பி வைத்துள்ளதாக இஸ்ரேல் ஐ.நா.விடம் குற்றம்சாட்டியுள்ளது.

# 5 குழந்தைகளைக் கொன்று பண்ணையில் புதைத்த தாய்

போலந்து நாட்டின் ஹிபோலிடோவோ கிராமத்தை சேர்ந்தவர் பீட்டா (41). இவருடைய கணவர் இறந்து விட்டார். இவர் கருவுற்றிருந்தார். ஆனால், பிரசவம் ஆனதா, குழந்தை பிறந்ததா என்று தெரியவில்லை. சில நாட்களில் பீட்டா சாதாரணமாக காட்சி அளித்தார். இதனால் சந்தேகம் அடைந்த சமூக சேவகர்கள் பொலிஸில் புகார் அளித்தனர். சந்தேகத்தின் அடிப்படையில் பீட்டாவின் பண்ணையில் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது பிறந்து சில நாட்களே ஆன 4 குழந்தைகளின் எலும்பு கூடுகளை பொலிஸார் கண்டுபிடித்தனர். உடனடியாக பீட்டாவை பொலிஸார் கைது செய்தனர்.

இதுகுறித்து அரசு வக்கீல் மரியா குடிபா கூறுகையில், கடந்த 1998ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை பீட்டாவுக்கு 8 குழந்தைகள் பிறந்துள்ளன. இப்போது 2 குழந்தைகள் மட்டும் தான் உயிருடன் உள்ளன. 4 குழந்தைகளின் எலும்பு கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 5வது குழந்தையின் சடலத்தை தேடி வருகின்றனர். 6ஆவது குழந்தையின் கதி என்னவென்று தெரியவில்லை. இறந்த குழந்தைகளுக்கு பீட்டாதான் தாயா என்பதை அறிய மரபணு சோதனை நடத்தப்படும். அத்துடன் மனநல மருத்துவரிடம் அவருக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளை பீட்டா எதற்காக கொன்றார் என்று தெரியவில்லை என்றார்.

# திவிநெகுமவை அமுல்படுத்த சர்வஜன வாக்கெடுப்பு

## உச்ச நீதிமன்றம் அறிவிப்பு

திவிநெகும சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் சர்ஜவன வாக்கெடுப்பு நடத்தப் பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. திவிநெகும சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக முதலில் நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அடிப்படையில் திவிநெகும விற்கு ஆதரவு வழங்கப்பட வேண்டிய அதேவேளை, சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் சபாநாயகர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு அறிவித்துள்து. திவிநெகும சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் உச்ச நீதிமன்றின் ஆலோசனையை கோரியிருந்தது.

குறிப்பாக வடக்கு மாகாண சபை நிறுவப்படாத நிலையில் மாகாண ஆளுநரின் ஒப்புதலுடன் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் முனைப்புக் காட்டியது. எனினும், சர்வஜனவாக்கெடுப்பு மற்றும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென உச்சநீதிமன்றம் ஆலோசனை வழங்கியுள்ளது.

இந்த ஆலோசனை வழங்கிய உச்ச நீதிமன்ற நீதவான் குழாமின் தலைமைப் பொறுப்பை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நாளைய தினம் திவிநெகும சட்டம் தொடர்பான விவாதம் நாடாளுமன்றில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தியேனும் திவிநெகும சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு....

இலங்கை இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய, இலங்கை இராணுவங்கள் இணைந்து அடுத்த ஆண்டு கூட்டுப்பயிற்சி ஒன்றை நடத்தவுள்ளன.

இது குறித்தும், இருதரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்புத் தொடர்பாகவும் கடந்தமாதம் புதுடில்லி சென்ற பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவுடன், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனனும், இந்திய பாதுகாப்புச் செயலர் சசிகாந்த சர்மாவும் கலந்துரையாடியிருந்தனர்.

இலங்கையுடன் எந்தவொரு பாதுகாப்பு உறவுகளையும் வைத்துக் கொள்வதற்குத் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இந்தநிலையில், அடுத்த ஆண்டில் இருநாட்டுக் கடற்படைகளும் கூட்டுப் பயிற்சியை நடத்தவுள்ளன.

எனினும், தென்மாநிலங்களின் உணர்வுகளுக்கு மதிப் பளித்து, அவற்றுக்கு வெளியே இந்த கூட்டுப் பயிற்சியை நடத்துமாறு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அன்ரனி உத்தரவிட்டுள்ளதாகவும் பி.ரி.ஐ. தெரிவித்துள்ளது.

## கேப்பாபிலவு...

இடங்களில் கால் ஏக்கர் வீதம் இந்தக் குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு, அதற்கான காணி அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

ஆனால், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை குறித்து கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, இந்த மக்கள் அவர்களது விருப்பத்திற்கு மாறாகவே வேறிடத்தில் அதுவும் வேறு ஆட்களுக்கு அரசாங்கத்தின் வேறு ஒரு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணிகளிலேயே குடியேற்றப்பட்டிருப்பதாகவும், இதற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்து கேப்பாபிலவு மக்களின் சொந்தக் காணிகளை இராணுவத்திடமிருந்து மீளப் பெற்று அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை அங்கேயே மீள்குடியேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவித்தார்.

## கிணற்றில்...

தெரியவருவதாவது,

மெதடிஸ்த ஆலய ஆண்டு விழாவிற்குச் சென்று திரும்பிய தாயாருடன் வந்த சிறுவன் தாயின் கையைத் தட்டி விட்டு முன்னே வீடு நோக்கி தோட்ட வரம்பில் ஓடியுள்ளான். அந்தவேளை கால் தடுக்கி தோட்டக் கிணற்றில் விழுந்துள்ளான். வீட்டுக்கு மகன் ஓடிச் சென்றபடியால் தாயாரும் வீட்டிற்கு வந்து தேடியபோதும் மகனைக் காணாது தவித்ததோடு, வந்த பாதையினூடாக மீண்டும் வந்தபோது நில மட்டமான அந்தக் கிணற்றடியில் ஒரு செருப்புக் கிடப்பதைக் கண்டு கூக்குரலிட்டு அயலவர்களின் உதவியுடன் அக்கிணற்றில் தேடியபோது சிறுவன் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டான். யாழ்.போதனா வைத்தியசாலையில் குறித்த சிறுவனது சடலம் ஒப்படைக்கப்பட்டு நேற்றிரவு பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. (இ)

## காய்ச்சலினால்...

ண்டதுடன், பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதோடு, சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் சாவகச்சேரி பதில் நீதவான் கணபதிப் பிள்ளை உத்தரவிட்டார்.

அதேவேளை, குடாநாட்டில் தற்போது ஒரு வகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது. சளியுடன் காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று தகுந்த முறையில் வைத்தியப் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.(இ)

## 13 ஆவது...

இராணுவ முகாம்களை அகற்றுதல், மும்மொழிக் கொள்கைகளை அமுல்படுத்தல், இராணுவத்தினர் பயன்படுத்தி வரும் தனியார் காணிகளை மீள ஒப்படைத்தல் போன்றவற்றின் ஊடாக மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

# வல்லைப் பாலப் பகுதியில் இளைஞர்கள் அட்டகாசம்

(வடமராட்சி)

வடமராட்சி வல்லைப் பாலப் பகுதியில் கடலில் நீராடச் செல்லும் இளைஞர்களின் அட்டகாசத்தால் அப்பாலப் பகுதியூடாகச் செல்லும் பொதுமக்கள் மற்றும் பெண்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடலில் நீராடுவதற்காக வரும் இளைஞர்கள் பாலத்தில் நின்று கொண்டு தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்துவதும், தங்களுக்குள்ளே கதைப்பதும் அநாகரிகமான முறையில் நடந்து கொள்வதாலும் தாம் சிரமங்களுக்குள்ளாவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இப்பாலத்தினூடாகச் செல்லும் பெண் பிள்ளைகளிடமே இவ் இளைஞர்கள் இவ்வாறு நடந்து கொள்வதால் அவர்கள் அச்சத்துடனேயே செல்லவேண்டிய நிலை காணப்படுவதாக பொது மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. (116)

# மண்டைதீவில் விதை விநியோகம்

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் வீட்டுத் தோட்டத்திற்கான விதைகள் வழீங்கப்பட்டு வரும் நிலையில் மண்டைதீவு ஜே/7, ஜே/9 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கும் விதைகள் வழங்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர் ரமேஸ் தலைமையில் கிராம அலுவலர் காரியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து மக்களுக்கு மரக்கறிப் பயிர்ச்செய்கைக்கான விதைகள் வழங்கப்பட்டது.

இதன்போது வைபவ ரீதியாக கிராம அலுவலர் காரியாலய வளவிற்குள் விதைகள் நாட்டப்பட்டது.

இந்நிகழ்வில், சமுர்த்தி உத்தியோகத்தர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர். மரக்கறி விதைகளுடன் நாற்று மேடை அமைத்தல், தொற்று நீக்கல், பசளையிடல் போன்ற வழிகாட்டிக் கையேடும் வழங்கப்பட்டுள்ளதால் பயனாளிகள் இவை தமக்கு நன்மையளிப்பதாகத் தெரிவிக்கின்றனர். (23)

# மன்னார் விவசாய நடவடிக்கை ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியின் போது விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாய நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தினால் மன்னார் மாவட்ட விவசாயத்தேவைகளுக்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகமட் றியாஸ் தெரிவித்தார்.

வறட்சியினால் பாதிக்கப்பட்ட மற்றும் மீள் குடியமர்ந்த விவசாயிகள் விவசாய நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்ற நிலையில் அவர்கள் நீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். விவசாய நடவடிக்கைகளின் போது பயன்படுத்துகின்ற குளம், நீர்த்தேக்கம், குழாய் கிணறுகள் போன்றவற்றை மீள் நிர்மாணம் செய்வதற்காக குறித்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதே சமயம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறித்த நிதியில் இருந்து உலர் உணவுகளும் வழங்கப்படவுள்ளதோடு பல்வேறு வேலைத்திட்டங்கள் அரசாங்கத்தினால் மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு முன்னெடுக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.முகமட் றியாஸ் மேலும் தெரிவித்தார்.

# பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் காரைநகர் வலைந்தலையில் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையத்தில் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுள்ளன.

இதில் வீட்டு மின்னிணைப்பு, முச்சக்கர வண்டி திருத்துதல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், தையல், கட்டட வினைஞர் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பபங்கள் கோரப்பட்டுள்ளது. ஆறு மாத காலத்திற்கு வழங்கப்படும் பயிற்சி நெறிக்கு 17 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இணைந்து கொள்ளலாம்.

மேலும் பாடசாலையை விட்டு இடைவிலகிய மாணவர்களும் உயர்கல்வியைத் தொடர முடியாத மாணவர்களும் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

பயிற்சியில் சித்தியடைந்தோருக்குத் தேசிய தொழிற்தகைமை (NVQ) சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் பொறுப்பதிகாரி இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, தொழிற் பயிற்சி நிலையம், வலைந்தலை, காரைநகர் என்னும் முகவரிக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீமுருகன் அறிவித்துள்ளார். (104)

# நான்கு ஆண்களின் சடலங்கள் சூட்டுக் காயங்களுடன் மீட்பு

(கொழும்பு)

காலி, பொத்தல, வல்பிட்டிவத்த பிரதேசத்திலிருந்து நான்கு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கை, கால்கள் கட்டப்பட்டு பின்னர் இந்த நான்கு பேர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி காலி டிக்சன் சந்தியில் இடம்பெற்ற கொலைச் சம்பவமொன்றுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், காலியில் மீட்கப்பட்ட நான்கு சடலங்கள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய் யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை காலி பொத்தல பகுதியில் கொலை செய்யப்பட்ட நால்வரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கடற்படை உறுப்பினர் என்பது தெரியவந்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் கொமா ண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

கொலை செய்யப்பட்டவர்களில் இருவர் காலி எகிலிகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர், ஏனைய இருவரும் காலி அம்பலன் வத்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

## விஷமிகளால்...

சபை உறுப்பினர்களான ஐயாக்குட்டி மயில்வாகனம், சின்னப்பு எட்வேட்ராசா ஆகியோரும் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன், தவிசாளர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு நடவடிக்கையைத் துரிதப்படுத்தியுள்ளார்.

## புலமைப்பரிசிலில்...

கோவன் ஆகியோர் மாணவர்களுக்கான நிதியுதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்வில், மாணவர்கள் பெற்றோர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டனர். (இ)

# அமெரிக்க நீதிமன்றத்தீர்ப்பு; எதிர்த்து மேன்முறையீடு



டொச் வங்கிக்கு எதிரான ஹெஜிங் வழக்கு குறித்து அமெரிக்க மத்தியஸ்த நீதிமன்றம் அறிவித்த தீர்ப்புத் தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை சட்டமாஅதிபர் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

டொச் வங்கியுடனான ஹெஜிங் உடன்படிக்கை மீறப்பட்டமை குறித்து அரசாங்கத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அமெரிக்க மத்தியஸ்த நீதிமன்றம் விசாரித்தது.

அந்த மத்தியஸ்த நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளில் ஒருவர் இலங்கைக்கு சார்பாகவும் மற்றைய இரண்டு நீதிபதிகள் எதிராகவும் கருத்துக்களை கூறியிருக்கின்றனர்.

இதற்கமைய வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்வதற்குரிய வழிவகைகளை சட்ட மா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

டொச் வங்கிக்கு எதிராக ஹெஜிங் வழக்கில் அந்த வங்கிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சி.பி.சி) 60 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டுமென அமெரிக்காவை தளமாகக் கொண்ட மத்தியஸ்த நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை தீர்ப்பளித்தது.

உரிய நேரத்தில் கடனைச் செலுத்தாமல் விட்டமைக்கான வட்டியுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அக்கடனை செலுத்தவேண்டியிருக்குமென அத்தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இது எங்களுக்கு எதிரான தீர்ப்பாகும் நாம், இந்தத் தீர்ப்பை செல்லுபடியற்றதாக்கத் தேவையான நடவடிக்கைகள் பற்றி யோசித்து வருகிறோம் என சட்டமா அதிபர் பாலித்த பெர்ணான்டோ தெரிவித்திருந்தார்.

2007 இல் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வடைந்துகொண்டிருந்தபோது வங்கிகளிடம் இழப்பீடு பெறும் வகையில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஹெஜிங் உடன்படிக்கையை செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 14 ஓட்டங்களினால் இலங்கை வெற்றி




இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது ஒரு நாள் சர்வதேச போட்டியில் 14 ஓட்டங்களினால் இலங்கை அணி வெற்றி பெற்றது.

பல்லேகலவில் நேற்று பகலிரவாக நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துப்படுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது.அவ்வணிசார்பாக நிக்கோல்46,வட்லிங்55,ரெய்லர் 72, பிராங்ளின் ஆட்டமிழக்காது35 ஓட்டங்களினைப் பெற்றனர். புந்து வீச்சில் மலிங்க2 குலசேகர, மத்தியுஸ், பெரேரா மற்றும் கேரத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 22.5 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்களை பெற்றது. எனினும் மழை குறுக்கிட்டதனால் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 14 ஓட்டங்களினால் இலங்கை அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. போட்டியின் ஆட்டநாயகனாக மலிங்க தெரிவானார்

## நாடு திரும்பியது ஜெட்லைனர்




படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது துருப்புக்காவி கப்பலாக செயற்பட்ட ஜெட்லைனர் தனது இறுதிப் பயணத்தை நேற்று மேற்கொண்டது.

இந்தக் கப்பல் இராணுவ தேவைகளுக்காக கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் சுமார் 6 வருடங்கள் பயன்படுத்தப்பட்ட பின்னர் அக்கப்பலை கையளிப்பதற்கு கடற் படையினர் தீர்மானித்துள்ளனர்.

மனிதாபிமான நடவடிக்கை உச்சக்கட்டத்தை எட்டியிருந்த போது இந்தக் கப்பல் இந்தோனேசிய நிறுவனத்திடமிருந்து குத்தகைக்கு பெறப்பட்டிருந்தது.

ஒரே நேரத்தில் 3,000 படையினரை ஏற்றிச்செல்லும் வசதிகளைக் கொண்ட இந்தத் துருப்புக்காவிக் கப்பல், வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில், படையினரையும் பொருட்களையும் விரைவாக ஏற்றி இறக்குவதற்கு உதவியாக இருந்தது எனக் கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறைக்கு இந்தக் கப்பல் வாரத்துக்கு மூன்று தடவைகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. 2009இல் போர்முடிவுக்கு வந்த பின்னர் உள்நாட்டு சேவைகளான கருத்தரங்குகள் மற்றும் விழாக்களை நடத்துவதற்கான மிதக்கும் அரங்கமாகவும் இது பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து இந்தோனேசியாவுக்கான பயணத்தை நேற்று மேற்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

## மின்சாரத்தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர்

(நயினாதீவு)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் மின் இணைப்பினைச் சீர் செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர் மின்சாரத்தாக்குதலில் பாதிக்கப்பட்டு யாழ். போதனாவைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கு.ஜெயக்குமார் (வயது 55) என்பவரே சம்பவத்தில் பாதிக்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நாகபூசணி அம்மன் ஆலய வெளிவீதிப் பகுதியிலுள்ள மின் இணைப்பினை நேற்று மாலை 5 மணியளவில் இவர் சீர் செய்து கொண்டிருந்த வேளை இவரை மின்சாரம் தாக்கியது. உடனடியாகவே நயினாதீவு வைத்தியசாலைக்கு கொண்டுசென்று முதலுதவிச் சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்திசாலைக்கு கொண்டுவரப்பட்டு அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.(175)

## பிரதம நீதியரசர் விடயம் உள்நாட்டு விவகாரம்

### - என்கிறது இந்தியா



பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஓர் உள்நாட்டு விவகாரமாகும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷிட் தெரிவித்துள்ளார். இலங்கையின் உள் விவகாரங்களில் சர்வதேச சமூகம் தலையீடு செய்யக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இலங்கையுடன் இந்தியா நட்புறவைப் பேணி வருவதாகவும் தேவையற்ற வகையில் உள்விவகாரங்களில் தலையீடு செய்யாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்ற போதிலும் உள்விவகாரங்கள் தொடர்பில் தலையீடு செய்வது அவசியமற்றது என அவர் தெரிவித்துள்ளார்.

## நீதியரசர் மீது விசாரணை; சர்வதேச அவதானிப்பு வேண்டும்

### - கோருகிறது ஐ.தே.க.



பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்காவிற்கு எதிராக குற்றவில் பிரேரணை தொடர்பான விசாரணைகளின் போது சர்வதேச மற்றும் உள்ளூர் சட்ட நிபுணர்களை, அவதானிப்பாளர்கள் அனுமதிக்க வேண்டும். என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் இந்த விசாரணையை நேரடியாகத்தொலைக் காட்சிகளில் அஞ்சல் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக்கட்சி இந்தத தெரிவுக்குழுவில் அரசியல் அமைப்பின் பிரகாரம் பங்கேற்கும் என அவர் தெரிவித்தார்.

## உயர்தரப் பெறுபேறுகள் ஜனவரி இறுதிக்குள்

2012ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட எதிர்பார்த்திருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் என்.ஜே.புஷ்ப குமார தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் இரண்டாம் கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது நாளை வரை நடைபெறும் எனவும் கூறினார்.

2012ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படுகிறது. மூன்றாம் கட்டப் பணிகள் நவம்பர் 10ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்த நிலையில் பெறுபேறுகளை ஜனவரி 31ஆம் திகதியளவில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

## பணிப்பெண்ணாக செல்ல கர்ப்பத்தைக் கலைத்த பெண்

பணிப்பெண்ணாக மீண்டும் வெளிநாட்டுக்கு செல்வதற்காக பெண்ணொருவர் தனது குறைமாத சிசுவை கர்ப்பத்திலேயே கலைத்து கழிவுகளை களவாக புதைத்த சம்பவம் ஒன்று களுத்துறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கர்ப்பத்தை கலைத்தது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பயாகல பெண்ணொருவர் தொடர்பிலான விபரங்கள் அடங்கிய அறிக்கையை பயாகல பொலிஸார் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

நாகொட பகுதியிலுள்ள மருந்தகம் ஒன்றில் 125 ரூபாவிற்கு பெற்றுக்கொண்ட மருந்தைப் பயன்படுத்தியே நான்கு மாத சிசுவை அப்பெண் கலைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறைமாத சிசுவை பெண்ணொருவர் கலைத்து அதன் கழிவுகளை களவாக புதைத்துள்ளதாக கிடைத்த இரகசியத் தகவல்களை அடுத்தே சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவர் தொடர்பில் பொலிஸார் அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

## நாடுதிரும்ப விரும்பும் அவுஸ்ரேலிய புகலிடதாரிகள்

அவுஸ்ரேலியா நவுறு தீவில் இருக்கின்ற இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களில் சிலர் மீண்டும் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையை சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களில் ஆண்கள் 11 பேரே இவ்வாறாக நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவின் புதிய குடியேற்றச் சட்டத்தின் பிரகாரம் புகலிடக் கோரிக்கையாளர்களாக படகு மூலம் செல்பவர்கள் நவுறு அல்லது பப்புவா நியூ கினியா தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

தற்போது நவுறு தீவில் 377 புகலிடக் கோரிக்கையாளர்கள் இருக்கின்றனர். புகலிடக் கோரிக்கையாளர்களில் 300 பேர் உணவு உட்கொள்ள மறுக்கின்றனர். மேலும் 25 பேருக்கு மருத்துவ சிகிச்சையளிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 நவம்பர் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.